விழி உங்களிடம்
அதன்
ஒளி எங்களிடம்
எரிக் கணேஷ்
[மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்]
566, கேணல் லிட்டு சாலை,
(ஆஸ்பத்திரி வீதி),
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

மூக்குக் கண்ணாடி
அழகிய பிறேம்
சிறந்த முறையில்
தெரிவு செய்து
அதே நாளில்
பெற்றுக்கொள்ள
எரிக் கணேஷ்
[மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்]
566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 27 சனிக்கிழமை (10 - 06 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 195

## "சீ - டான்ஸர்" கடலில் மூழ்கியதற்கு தலைவர் பிரபா வருத்தம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் "சீ-டான்ஸர்," கப்பல் கடல் கண்ணிவெடியில் சிக்கி கடலில் மூழ்கிய சம்பவத்துக்கு தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் தமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில், உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் தலைமை அதிகாரிக்கு எழுதிய கடிதத்திலேயே இச் சம்பவம் குறித்து தமது ஆழ்ந்த வருத்தத்தையும், இச் சம்பவத்தில் உயிரிழந்த கப்பல் ஊழியரின் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

'சீ-டான்ஸர்' கப்பல் கடல் கண்ணிவெடியில் சிக்கிய சம்பவம் துரதிர்ஷ்டவசமானது எனக் குறிப்பிட்ட தலைவர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்பு

(6 ஆம் பக்கம் பார்க்க)



## இனப்பிரச்சினைக்குவருட இறுதிக்குள் தீர்வு காணப்படும் என்கிறார் சந்திரிகா

கொழும்பு, ஜூன் 10

இனப் பிரச்சினைக்கான பரிகாரத்தை நாம் இவ்வருட இறுதிக்குள் காண்போம் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கையுள்ளது.

விடுதலைப் புலிகள் போரில் குதித்துள்ளனர். அவர்களைத் தோற்கடிப்பதற்கான சகல நடவடிக்கைகளிலும் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூறியிருக்கிறார்.

மூத்த பொலீஸ் அதிகாரிகளுக்கான மாநாடு ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் அலரி மாளிகையில் நடத்தினார்.

அப்போதே அவர் மேற்கண்டவாறு நம்பிக்கை தெரிவித்தார்.

அம் மாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கு-கிழக்கு பிரச்சினைகளை சமாதானமாக தீர்த்து வைப்பதற்காக அரசாங்கம்

(6ஆம் பக்கம் பார்க்க)

### தலைநகரில் ஒருவாரத்தில் மூன்றாவது சம்பவம்

# கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் நேற்று பஸ்ஸில் குண்டு வெடித்தது!

## அதில் இருந்த நால்வர் காயம்

கொழும்ப, ஜூன் 10

தலைநகர் கொழும்பில் — இவ்வாரத்தில் மூன்றாவது சம்பவமாக — நேற்று மாலை குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

புறக்கோட்டை குணசிங்கபுர பகுதியில் தரித்து நின்ற தனியார் பஸ் ஒன்றிலேயே நேற்று மாலை ஐந்து மணியளவில் குண்டு வெடித்தது. இதனால் அந்த பஸ்ஸில் அவ்வேளை அமர்ந்திருந்த நான்கு பெண் பயணிகளும் காயமடைந்தனர்.

அனுராதபுரம் செல்வதற்காகத் தயாராக இருந்த பஸ்ஸிலேயே இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றது.

அச்சமயம் பஸ்ஸில் அதிக பயணிகள் இல்லாததால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டதாக ஸ்ரீலங்கா அரச தரப்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

கடந்த திங்களன்று கட்டுநாயக்கா விமான நிலையப் பகுதியில் வாகனம் ஒன்றில் இருந்து குண்டு வெடித்ததும்—

கடந்த செவ்வாயன்று கொழும்பு கோட்டை ஹோட்டல் ஒன்றில் குண்டு வெடித்ததும் குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து மூன்றாவது குண்டு நேற்று புறக்கோட்டையில் வெடித்திருக்கிறது. [உ-4-6]

## வடக்கு படையினருக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் வவுனியாவில் தேக்கம்

கொழும்பு, ஜூன் 10

வடக்கு இராணுவ முகாம்களில் உள்ள படையினருக்கென வந்த கடிதங்களைக் கொண்ட 125 கிலோ எடையுள்ள பொதிகள் வவுனியாவில் குவிந்து கிடப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கில் இராணுவ முகாம்களில் இருக்கும் துருப்புகள் தங்களுக்கான விநியோகங்களில் பெருமளவு தடைப்பட்டிருப்பதனால் மனோரீதியான நெருக்குதலுக்குள்ளாகியிருப்பதாகவும் இராணுவ வட்டாரங்கள் புதன்கிழமை தெரிவித்தன.

"படைவீரர்கள் விரக்தியுற்றிருக்கிறார்கள். அவர்கள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### வடக்கில் உள்ள படையினரின்

## முகாம்களில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட புலிகள் காத்திருக்கின்றனர்

கொழும்பு, ஜூன் 10

விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதல்களை அடுத்து, வடக்கிற்கான விமானப் போக்குவரத்துகள் இடைநிறுத்தப்பட்டமையால் வடபகுதி இராணுவ முகாம்களில் உணவு நிலைமை மிகவும் பாரதூரமானதாக உள்ளதாக வடபகுதி இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி, கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

"புதிய உணவு வகைகள் எதுவும் படையினருக்குக் கிடைப்பதில்லை. இதே நிலைமையில் எவ்வளவு காலத்துக்கு தாக்குப்பிடிக்க முடியும்?" — இவ்வாறு வடபகுதி போர்முனையில் உள்ள அந்த இராணுவ அதிகாரி கேள்வி எழுப்பினாராம்.

"இராணுவ முகாம்களில் உணவுப்பொருள் பற்றாக்குறை ஏற்படுவதற்காக புலிகள் காத்திருக்கிறார்கள் போல் தெரிகிறது. அதன் பின்னர் அவர்கள் தாக்குதலை ஆரம்பிக்கக் கூடும்" என்று இராணுவத்துறை ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.

வேறு ஒரு இராணுவ அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில் "எமது முகாம்களைச் சுற்றி புலிகள் வேவுபார்த்துக் கொண்டிருக்கிறார்கள்." — என்றார்.

(உ-14)

## பாணந்துறை ஏரியில் கரை ஒதுங்கிய 4 சடலங்கள் தமிழருடையவையா?

பாணந்துறை பொல்கொட ஏரியில் மிதந்து வந்து கரையொதுங்கிய — மர்மத்துக்கிடமான — நான்கு சடலங்கள் பாணந்துறை பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

அடையாளம் காண முடியாதவாறு சிதைவடைந்த நிலையில் காணப்படும் இச் சடலங்கள் தமிழர்களுடையதா என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

சடலங்கள் மோசமான முறையில் பழுதடைந்திருப்பதால் மரணத்துக்கான காரணத்தையும் அறியமுடியாதிருப்பதாக பாணந்துறை பொலீஸார் தெரிவித்தனர்.

மே 30 ஆம் திகதியே இவ் ஏரியில் மிதந்துவந்து கரையொதுங்கிய இரண்டு சடலங்கள் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன. பிலியந்தலைக்கும் பாணந்துறைக்கும் இடையே பயணிகள் படகுச் சேவையை நடத்திவரும் படகோட்டி ஒருவரே இச்சடலங்கள் மிதந்து வருவது தொடர்பான தகவலைப் பொலீஸாருக்குக் கொடுத்துள்ளார். இத் தகவலைத் தெ[illegible]

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி தமிழர் 15 பேர் உடப்பில் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 10

சிலாபத்தின் உடப்பு பகுதியை அண்மையில் ஒரு நாள் காலை முதல் சுற்றிவளைத்த சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட பொலீஸார் அங்கிருந்து 15 வடபகுதித் தமிழர்களைக் கைது செய்து கொண்டு சென்றனர்.

யாழ்ப்பாணம், பரந்தன், கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளைச் சேர்ந்தோரே கைது செய்யப்பட்டனர்.

[உ-4]

## காலி சம்பவம்: 10 பேர் கைது

கொழும்பு, ஜூன். 10

காலியில் தமிழர்களின் கடைகளை எரித்த சம்பவம் தொடர்பாக பத்து சந்தேக நபர்களை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களை எதிர்வரும்15 ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும் படி காலி நீதிவான் உத்தரவிட்டார்.

தமிழர்களின் கடைகளிலிருந்து சூறையாடப்பட்ட பொருள்களில் ஒரு பகுதி மீட்கப்பட்டிருப்பதாக காலி பொலீஸார் தெரிவித்தனர்.

## காரைதீவில் முகாம் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஜூ 10

அம்பாறை காரைதீவில் அண்மையில் அமைக்கப்பட்ட அதிரடிப்படை முகாம் பாரியளவில் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. காரைதீவில் எல்பே மில் என்ற இடத்தில் அமைக்கப்பட்ட இந்த அதிரடிப்படை முகாமுக்கு பெருமளவில் அதிரடிப் படையினர் கொண்டு வந்து குவிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (உ-4)

## மிதிவெடியில் 3 படையினர் கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் மிதிவெடிகளில் சிக்கி 3 இராணுவத்தினர் கால்களை இழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு 6 ஆம் கட்டைப் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்ட இராணுவச் சிப்பாய் ஒருவரும் —

கடந்த புதன்கிழமை ஆயித்தியமலைப் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய்கள் இருவரும் —

[illegible] மிதிவெடிகளில் சிக்கி [illegible] தெரிவிக்கப்பட்டது. [உ-4]

## திங்கள் 'நரோமா' சேவை நடைபெறாது

கொழும்பு, ஜூன் 10

திருகோணமலையில் இருந்து எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் செல்லவிருந்த "நரோமா" பயணிகள் கப்பலின் பயணம் பிற்போடப்பட்டிருப்பதாக நேற்றிரவு இலங்கை வானொலி அறிவித்தது.

கப்பலில் கோளாறு ஏற்பட்டிருப்பதே இதற்கான காரணம் என்றும் —

இந்தக் கப்பலின் சேவையை எப்போது ஆரம்பிப்பது என்பது பற்றி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பின்னர் அறிவிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[உ-4]

## குண்டு வெடிப்பால் கொழும்பில் பீதி!

கொழும்பு ஜூன் 10

தொடர்ந்து இடம் பெற்று வரும் குண்டு வெடிப்புச் சம்பவங்களினால் தலைநகர் கொழும்பில் பெரும் பீதி நிலவுவதாகத் தெரியவருகின்றது.

தலைநகரின் வழமையான வாழ்க்கை நிலை இக்குண்டு வெடிப்புகளினால் பாதிக்கப்பட்டிருப்பதாகச் செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

குண்டு வெடிப்புக்கு அஞ்சி படையினர் தமது கெடுபிடிகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இதனால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பதாகவும்—

படையினரின் வீதித் தடைகள், சோதனைகள் காரணமாக போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்பட்டிருப்பதாகவும்—

மேலும் தெரிவிக்கப்பட்டது

ஜனாதிபதி இல்லம் அமைந்துள்ள வீதி மூடப்பட்டிருப்பது. ஏற்கனவே உள்ள வாகனப்போக்குவரத்து நெரிசலை மேலும் தீவிரப்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## வன்னிக்கு உணவுப் பொருள்கள் வாகன அணியில் எடுத்துவர ஏற்பாடு

### கிளிநொச்சி அரச அதிபரின் முயற்சிக்குப் பலன்

ஓமந்தை, ஜூன் 10

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கு, அரச அதிபர்களின் பொறுப்பில் உணவுப் பொருள்களை எடுத்து வரும் வாகன அணி தொடர்ந்து சேவையில் ஈடுபடும்.

வன்னியின் மூன்று மாவட்டங்களுக்கும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை வாகன அணியில் எடுத்து வருவதை இம்மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் தடுக்கப் போவதாக வவுனியாவில் உள்ள இராணுவத்தினர் எச்சரிக்கை விடுத்து வந்தனர்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. தில்லைநடராசா அவசரமாக எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து வாகன அணியில் பொருள்களை தடங்கலின்றிக் கொண்டுவர வழிபிறந்துள்ளது.

இராணுவத்தினர் எச்சரிக்கை விடுவதாக அறிந்ததும் திரு. தில்லைநடராசா அவசரமாக வவுனியாவுக்கு விரைந்தார். அங்கு இராணுவ உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார்.

அதனைத் தொடர்ந்து வாகன அணியில் இப்போது உணவுப் பொருள்கள் கொண்டு வரப்படுகின்றன.

(அ-9)

## வடபகுதிக்கு தனியார் லொறிகள் வருவதற்கு ராணுவம் அனுமதிக்கும்?

ஓமந்தை, ஜூன் 10

வடபகுதிக்கு தனியார் லொறிகளில் பாவனைப் பொருள்களை கொண்டுவருவதற்கு இராணுவத்தினர் விரைவில் அனுமதி வழங்குவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வடபகுதிக்கு பாவனைப் பொருள்களைக்கொண்டுவரும் தனியார் லொறிகளை கடந்த ஒன்றரை மாதத்திற்கு மேலாக வவுனியாவில் உள்ள இராணுவத்தினர் தடுத்து வந்தனர்.

அதனால் நூற்றுக்கணக்கான லொறிகள் நீண்ட நாட்கள் அங்கு தங்கிக் காத்து நின்றதும் —

இராணுவத்தினர் தமது தடையை அகற்றாமையினால் பல லொறிகள் கொழும்புக்குத் திரும்பியதும் தெரிந்தவையே.

கொழும்பு உயர் அதிகாரிகளின் பணிப்பின் பேரில் வட பகுதிக்கு வரும் தனியார் லொறிகள் மீதான தடை விரைவில் நீக்கப்படும் என்று தெரிய வருகிறது.

வட பகுதிக்கு வரும் லொறிகளில் பலவும், இராணுவக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தேசியப் பட்டியல் எம்.பி. பதவியிலிருந்து நீக்குவதா?

## தொண்டா விவகாரத்தில் ஐ.தே.க. முடிவு எடுப்பதை தள்ளிப்போட்டது!

கொழும்பு, ஜூன் 10

அமைச்சர் எஸ். தொண்டமானை ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் எம்.பி. பதவியில் இருந்து நீக்குவது தொடர்பான விவகாரத்தில் முடிவு எடுப்பதை கட்சியின் செயற்குழு ஒத்தி வைத்துள்ளது.

அவரை தேசிய பட்டியலில் இருந்து நீக்குவதா இல்லையா என்பது குறித்து பொறுத்திருந்து அவதானிப்பது என கட்சி தீர்மானித்துள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறள தெரிவித்தார்.

ஐக்கிய தேசியகட்சி மூலம் தெரிவு செய்யப்பட்ட தொண்டமான், கட்சியின் கொள்கைக்கு மாறாக செயற்படுகிறார் என்றும் —

அதனால் அவரைத் தொடர்ந்து எம்.பியாக இருக்க அனுமதிப்பது குறித்து கட்சி தீர்மானிக்க வேண்டும்

( 6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழ் விவசாயிகளை சித்திரவதை செய்யும் படையினர்!

## சிலரின் உடைகளை களைந்து விரட்டியடித்தனர்!!

கொழும்பு, ஜூன் 10

மட்டக்களப்பு மாவட்டத்தில் வயல்களுக்குச் செல்லும் விவசாயிகள் மிக மோசமாக கீழ்த்தரமான முறையில் தாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றனர். இதனால் அங்கு பயிர்ச் செய்கையை கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அண்மையில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் சம்பவம் ஒன்றில், தரவைக்குளம் இராணுவ முகாம் முற்றாக அழிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வயல்களுக்குச் செல்லும் விவசாயிகளை காணும் போதெல்லாம் படையினர் அவர்களை தாக்கி வருகின்றனர்.

விவசாயிகளைப் பிடித்து பல மணிநேரம் ஆற்றுக்குள் அமிழ்ந்திருக்குமாறு பணிக்கப்படுகின்றனர். வேறு சிலரை 500 வாளி நீரை கரையில் இறைக்குமாறு பணிக்கப்பட்டனர்.

வயோதிப விவசாயிகள் சிலர் தண்ணீர் நிறைந்த மதகின் ஊடாக புகுந்து வெளியேறவும், வேறு சிலர் தாம் கொண்டு சென்ற மரக்கறிகளை பச்சையாகவே உண்ணுமாறும் பணிக்கப்பட்டனர்.

வழுக்கைத் தலை கொண்ட விவசாயிகளின் தலையில் அலுமினிய பாத்திரங்கள் வைக்கப்பட்டு வெய்யிலில் நிற்க வைக்கப்பட்டனர்.

விவசாயிகள் பலர் தாக்கப்பட்டு உடைகள் களையப்பட்ட நிலையில் வீதியால் விரட்டப்பட்டனர்.

இத்தகைய சம்பவங்களால் அச்சமடைந்துள்ள விவசாயிகள் தமது வயல்களுக்கு செல்வதேயில்லை. இவர்கள் தமது வீடுகளுக்கும் செல்ல அஞ்சி, காடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அதேசமயம், கிரான்துறை இராணுவ முகாமில் அரச பஸ் ஊழியர்கள் 12 பேர் பல நாட்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் பஸ்டிப்போவுக்குச் சொந்தமான பஸ்களும் இராணுவத்தினர் வசம் உள்ளன.

இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள பஸ் ஊழியர்கள் பகலில் இராணுவ முகாமுக்கு வெளியிலும், இரவில் உள்ளேயும் வைக்கப்படுகின்றனர்.

படையினர் வேறு முகாமுக்கு மாற்றப்பட உள்ளதனால், அவர்களின் பாதுகாப்பின் பொருட்டே இந்த ஊழியர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

### நாளை

தென்மராட்சி, ஜூன் 10

சாவகச்சேரி ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தினரால் கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் மந்துவில் பகுதியில் உள்ள நான்கு கிராம அலுவலர் பிரிவுகளில் நடத்தப்பட்ட இலவச வைத்திய சேவையின் இறுதி நாள் நிகழ்வுகள் நாளை ஞாயிறு காலை 9.00 மணிக்கு மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

"நில அளவையும் மட்டம் நோக்கலும்" என்ற நூலின் அறிமுக விழா நாளை காலை 10 மணிக்கு யாழ். கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் திரு. க. ஜெயரெட்ணம் பிரதம விருந்தினராகவும், பொறியியல் துறைத் தலைவர் திரு. சு. சா. பூரணம்பிள்ளை, நில அளவையாளரும் நூல் மொழிபெயர்ப்பாளருமான திரு. செ. சிவலோகநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். [உ]

### ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

வண. சகோதரர் ஹிலறி ஜோசப் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் லாசாலா சகோதரர்கள் சபை நடாத்தி வந்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் மறு அறிவித்தல் வரை ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த இறுதியாட்டம் இன்று மாலை நடைபெறவிருந்தது. [உ]

### பாடசாலைகளில்

வல்வை சிதம்பராக் கல்லூரியின் ஸ்தாபகர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 4 மணிக்கு கல்லூரி கலாமண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் திரு. செ. யோகசந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா கலந்து கொள்வார். (உ-155)

★ ★ ★

எதிர்வரும் 19 ஆம் திகதி திருகோணமலை கூட்டுறவுக் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவிருந்த கூட்டுறவுப் பரிசோதகருக்கான இரண்டாம் பயிற்சி நெறி மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அறிவித்துள்ளார். (உ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் 15 வயது 17 வயதுப் பிரிவினருக்கு இடையிலான கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

15 வயதுப் பிரிவு

★ யாழ் இந்து எதிர் சென் ஜோன்ஸ் — யாழ். இந்து மைதானத்தில்.

17 வயதுப் பிரிவு

★ சென் ஜோன்ஸ் எதிர் யாழ் இந்து — சென் ஜோன்ஸ் மைதானத்தில்.

★ சென் பற்றிக்ஸ் எதிர் ஸ்கந்தவரோதயா — சென். பற்றிக்ஸ் மைதானத்தில்.

★ யூனியன் எதிர் ஹாட்லி — கொக்குவில் இந்து மைதானத்தில்.

★ யாழ் மத்திய கல்லூரி எதிர் கனகரத்தினம் ம.ம.வி. — யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில்.

★ ★ ★

டொனால்ட் சுரேந்திரகுமார் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இரு ஆட்டங்கள் நாளை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளன விவரம் வருமாறு:-

★ கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி.க. அணி எதிர் ஜொலிஸ்ரார்ஸ் அணி — யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில்.

★ யாழ். பல்கலைக்கழக அணி எதிர் சென்றலைட்ஸ் புளூஸ் அணி — யாழ். பல்கலைக்கழக மைதானத்தில்

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் ஆண்கள் பிரிவுக்கான ஆட்டங்கள் இன்று மாலை 4 மணிக்கு கழக மைதானத்தில் ஆரம்பமாகும்.

வலி. கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் இணைந்த விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 'லீக்' முறையிலான சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் நாவாந்துறை சென் நீக்கிலஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றன. இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.00 மணி:- சென்மேரிஸ் எதிர் எவரெஸ்ட்

★ 4.00 மணி:- றோயல் எதிர் சென் றோக்ஸ்

★ 5.00 மணி:- சென் நிக்கிலஸ் எதிர் பாடும்மீன்

★ ★ ★

"உதயன்" கிண்ணத்திற்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நாளை பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.45 மணி:- ஞானமுருகன் அணி எதிர் சந்திரா அணி

★ 4.45 மணி:- சென் மேரீஸ் அணி எதிர் றோயல் "பி" அணி.

★ ★ ★

யாழ் மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் மாவட்ட நிலை மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 12, 13, 14 ஆம் திகதிகளில் யாழ் மத்திய கல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானங்களில் நடைபெறவுள்ளன. வலய மட்டங்களில் தனிநபர் நிகழ்ச்சிகளில் முதல் ஆறு இடங்களைப் பெற்ற வீரர்களும், முதல் மூன்று அஞ்சல் அணிகளும் இறுதிப் போட்டிகளில் பங்குபற்றலாம்.

பங்குபற்றும் பாடசாலைகளுக்கு நிகழ்ச்சி நிரல், இலக்கங்கள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

# யுத்தமும் அரசின் ஏமாற்று வித்தையே!

## ரணில் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 10

"சமாதானத்தைப் போன்று, யுத்தமும் அரசின் ஏமாற்று வித்தையே"

இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்க.

உடுப்பத்தானையில் நடைபெற்ற கட்சிக்கு உறுப்பினர்களை சேர்த்துக்கொள்ளும் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது:

தற்போதைய அரசு சமாதானம் என்றும் யுத்தம் என்றும் கூறி மக்களை ஏமாற்றுகிறது. பொறுப்பின்றி செயற்படும் இந்த அரசு, மக்களை ஏமாற்றுவதற்கு ஐ.தே.க. இடமளிக்கப்போவதில்லை.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசு நாட்டின் மீது அக்கறையின்றி, பொறுப்பின்றி செயல்பட்டு வருகிறது.

யுத்தம், வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் என்பவற்றுக்குத் தீர்வு இருப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த இந்த அரசின் தீர்வு எங்கே போய் விட்டது?

எதையுமே சரிவரச் செய்யத் தெரியாத இந்த அரசு, நாட்டு மக்களின் பாதுகாப்பை அழித்து விட்டதானது மன்னிக்கமுடியாத செயலாகும்.

முப்படையினருக்கும் கூட அரசின் மீது நம்பிக்கை இல்லை.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த போது நாட்டின் மூலை முடுக்கு எங்கும் சந்திரிகா பற்றியே பேசப்பட்டது. ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது; எங்கும் பிரபாகரன் பற்றியே பேசப்படுகிறது. ஒன்பது மாத கால மாற்றம் இதுதான் — இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-5)

### பேராசிரியர் துரைராசா நினைவு விழா

வடமராட்சி, ஜூன் 10

அமரர் பேராசிரியர் அ. துரைராசாவின் முதலாவது ஆண்டு நினைவுதினம் நாளை 11 ஆந் திகதி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கொண்டாடப்படவுள்ளது.

அமரரின் உருவப்படம் ஒன்று கல்லூரியில் திரைநீக்கம் செய்து வைக்கப்படுவதுடன், வதிரி பரமானந்தா ஆச்சிரம சிறார்களுக்கு மதிய உணவும் வழங்கப்படும்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (அ-173)

# தமிழ் பொலிஸ் அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டார்

நிந்தவூர், ஜூன் 10

தம்புள்ள பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்த — தமிழரான — சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

தனது திருமணத்திற்காக விடுமுறையில் அக்கரைப்பற்று நாவற்காடு வந்திருந்த மு. ரவீந்திரன் என்ற சப் இன்ஸ்பெக்டரே இவ்வாறு கொல்லப்பட்டவர் ஆவார்.

வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த இவரை இரு இளைஞர்கள் வந்து அழைத்துச் சென்றதாகவும் —

மறுநாள் அவரின் சடலம் கண்டு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. [உ-14]

### பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாண இந்துக் கல்லூரி பிரதி அதிபராக இருந்து ஓய்வு பெற்றுச் சென்ற திரு. சே. சிவராஜாவின் சேவை நயம் பாராட்டு விழா இன்று பி.ப. 3 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன் இப்பிரிவுபசார விழாவுக்கு தலைமை வகிப்பார்.

கல்வித்துறை மற்றும் கல்லூரியின் சங்கங்களைச் சேர்ந்த பலரும் வாழ்த்துரைகளை வழங்குவர்.

நல்லை ஆதீன முதல்வரின் ஆசியுரையும் இடம்பெறும்.

குண்டசாலையிலிருந்து நல்ல இனக்காளைகள்;

# செயற்கை முறைச் சினைப்படுத்தல் தற்பொழுது சீராக நடக்கிறது

திருநெல்வேலியில் உள்ள விவசாய நிறுவன செயற்கை முறை சினைப்படுத்தல் பிரிவுக்கு குண்டசாலை மத்திய நிலையத்தில் இருந்து புதிய நல்ல இனக்காளைகள் தருவிக்கப்பட்டுள்ளன.

புதிய காளைகள் இங்கு தருவிக்கப்பட்டதைத் தொடர்ந்து — யாழ்ப்பாண மாவட்டத்தில் பசுக்களுக்கான செயற்கை முறைச் சினைப்படுத்தல் வேலைகள் கால்நடை வைத்தியர் பிரிவுகள் தோறும் தற்போது சீராக மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போதியளவு கால்நடைக் காளைகள் இல்லாத காரணத்தாலும் — திருநெல்வேலி நிலையத்தில் இருக்கும் காளைகளுக்கேற்பட்ட சுகவீனங்களாலும் —

கடந்த சித்திரை மாதத்தில் இருந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கால்நடை வைத்தியர் பிரிவுகளில் செயற்கைமுறைச் சினைப்படுத்தல் வேலைகள் சீரற்று வீழ்ச்சியடைந்திருந்தன.

யாழ்ப்பாணம் — தெல்லிப்பழை கால்நடை வைத்தியர் திருமதி சிவபாதசுந்தரம் மேற்கொண்ட துரித முயற்சியினால் — பல்வேறு கஷ்டங்கள் மத்தியிலும் காளைகள் குண்டசாலை நிலையத்தில் இருந்து திருநெல்வேலி நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

செயற்கை முறை சினைப்படுத்தலுக்காக பயன்படுத்தும் நோக்குடன் ஐரோப்பிய இனமான 'ஜேர்சி', இந்திய இனமான தர்பகார் அல்லது சிந்து இனக்காளைகள் தருவிக்கப்பட்டுள்ளன.

எனவே —

கால்நடை வளர்ப்போர் தத்தம் பிரிவு கால்நடை வைத்திய நிலையங்களில் தாம் விரும்பும் இனங்களை தெரிவு செய்து, பதிவு செய்து கொண்டு செயற்கை முறைச் சினைப்படுத்தலை மேற்கொள்ளுமாறு தெல்லிப்பழை கால்நடை வைத்தியர் அறிவித்துள்ளார்.

அதே நேரத்தில் —

ஆடுகளுக்கான ஜமுனாபாரி, சானன் ஆகிய கடா இனங்கள் மூலம் சினைப்படுத்தல் சேவை பாதிப்பின்றி தினமும் நடைபெறுவதாகவும்

செயற்கை முறை சினைப்படுத்தலுக்கான பதிவுகளை தினமும் காலை 8 மணி தொடக்கம் 10 மணி வரை கால்நடை வைத்தியர் அலுவலகங்களில் மேற்கொள்ளுமாறும் கால்நடையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது (ஒ-153)

# தமிழீழ மக்கள் ஒன்றிணைந்து எதிரியை முறியடிக்க வேண்டும்

## போர்க்காலக் கருத்தரங்கில் உரை

தென்மராட்சி ஜூன் 10

"சிங்கள அரசு இன்னும் ஒரிரு மாதங்களில் வெளிநாடுகளின் ஒத்துழைப்புடன் எமது பகுதியை ஆக்கிரமிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழீழ மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராடி எதிரியின் ஆக்கிரமிப்பை முறியடிக்க வேண்டும்."

கடந்த மே 16ஆம் திகதி முகமாலை இந்திராபுரத்தில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் தென்மராட்சி கலை பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த இரத்தினம் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்

பளை வட்டப் பொறுப்பாளர் வெற்றிச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் மேலும் உரையாற்றுகையில் அவர் கூறியதாவது:

இந்திய இராணுவம் எமது பகுதியில் இருந்த போது எமது பிள்ளைகள் மீது நடத்திய தாக்குதல்கள் சித்திரவதைகள் நாம் இலகுவில் மறக்கக் கூடியவையல்ல. இந்திய இராணுவம் எமது பிள்ளைகளை கண்முன்னே வைத்து சித்திரவதை செய்த போது ஒவ்வொரு பெற்றோரும் அழுது குமுறினார்களே தவிர இந்தியப்படையினரை ஒன்றும் செய்ய முடியவில்லை.

சிங்களப்படை எமது பகுதிக்கு வந்தால் எமது பகுதி சுடுகாடாக மாறக் கூடிய நிலை ஏற்படும். சிங்களப் படையின் ஆக்கிரமிப்பு எத்தகையதாக இருக்கும் என்பதற்கு மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் கிராமத்தில் அவர்கள் நடத்திய 167 பேரின் கொலை வெறியாட்டம் உதாரணமாக அமைகிறது

இக்கொலை வெறியாட்டத்தில் 3 மாத குழந்தை முதல் ஏழு வயது சிறுமி வரையும், 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்களும், மூதாட்டிகளும், பல தாய்மார்களும் சிங்களப்படையால் அநியாயமாக கொல்லப்பட்டனர்.

சிங்கள வெறியாளர்கள் தமிழ் மக்கள் அனைவரையும் விடுதலைப்புலிகள் என கருதுவதால் சிங்கள அரசினால் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் தமிழினத்தை கூண்டோடு அழிக்கும் நடவடிக்கையாகவே அமையும். எமது பகுதியில் கால் வைக்கும் எதிரியின் சால்களை உடைத்து விடுதலைப் புலிகள் மட்டுமல்ல தமிழரே விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றுகின்றது என்பதை உலகறியச் செய்ய வேண்டும்

அந்நியப் படை எம்மைச் சூழ்ந்துள்ள வேளையில் கல்வி கற்பதிலும், உழைத்துப் பணம் சேகரிப்பதிலும் பலர் ஈடுபட்டு வருகிறார்கள். எதிரியின் குண்டினால் கிடைக்கும் அநியாயச் சாவினை கல்வியும் பணமும் தடுத்து விடாது. சுதந்திரமில்லாத நாட்டில் கல்வி கற்பதாலோ உழைத்துப் பணம் சேர்ப்பதாலோ பயன் கிடையாது

எதிரியின் கையை முடக்க விரும்பும் விடுதலைப் புலிகளின் கையை ஓங்கவைக்க இளைஞர்களும் யுவதிகளும் அணி திரண்டு வர வேண்டும். எமது மக்களின் சுதந்திரமான வாழ்வுக்கு உங்களின் வருகை பெரும் உறுதுணையாக அமையும் என்றார் அவர். (க-117)

சகோதரரின் திருமணத்துக்காக

# கொழும்பு சென்ற இளைஞர் சந்திக்க நேர்ந்த அனுபவம்

கொழும்பு, ஜூன் 10

கனடாவில இருந்து வந்த தனது சகோதரனது திருமணத்தில் கலந்து கொள்ள கொழும்பு சென்ற வடபகுதி வாலிபர் ஒருவர் தனது வாழ்க்கையில் மறக்கமுடியாத அனுபவங்களை அங்கு பெற்றுக் கொண்டார்.

திருமணம் செய்ய வந்த இவரது சகோதரர், கனடாவில் இருந்து தனது கனேடிய நண்பர் ஒருவரையும் அழைத்து வந்திருந்தார்.

வடபகுதி வாலிபர், தனது சகோதரனின் வெள்ளைக்கார நண்பரை கல்கிசை கடற்கரையின் அழகைக் காண்பிக்க அழைத்துச் சென்றார்.

கடற்கரை எழிலை அனுபவித்த அந்த வெள்ளைக்கார நண்பர் அதனை படம் பிடிக்கவும் ஆசைப்பட்டார்.

கடற்கரை எழிலுடன் தன்னையும் சேர்த்து புகைப்படம் எடுக்குமாறு வடபகுதி வாலிபரை கனேடிய நண்பர் கேட்டுக் கொண்டார். அவரும் அவ்வாறே படம் எடுத்தார்.

அந்தக் காட்சி அங்கு சுற்றிக் கொண்டிருந்த பொலீஸாரின் கழுகுக் கண்களுக்குள் அகப்பட்டு விட்டது

அவ்வளவு தான்! இருவரையும் கைது செய்தனர் அவர்களது கமெராவுடன்

கொழும்பில் உள்ள கனடா தூதரகத்திற்கு செய்தி பறந்தது

தூதரகம் தலையிட்டதை அடுத்து, பொலிஸில் பதிவு செய்யப்பட்ட பின், கனேடியர் மட்டும் விடுவிக்கப்பட்டார்.

என்.ஐ.பி எனப்படும் தேசிய புலனாய்வுப் பணியகத்தின் அறிக்கை கிடைக்கும் வரை விடுவிக்க முடியாது எனக் கூறி வடபகுதி வாலிபர் பொலிஸ் கூண்டில் அடைக்கப்பட்டார்.

அறிமுகமானவர்களின் உதவியுடன் முயற்சி எடுத்ததில் என். ஐ. பி. அறிக்கை மறுநாளே கிடைத்தது.

அதனை அடுத்து, நீதிமன்றின் மூலம் பிணையில் விடுதலை செய்வதற்காக அவர் கல்கிசை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கு பிணை எடுக்க வந்தவர் யார் என விசாரிக்கப்பட்டது.

பிணை எடுக்க வந்தவர் கல்கிசை பொலிஸ் எல்லைக்கு வெளியே வசிப்பவர் என்ற காரணத்தை முன் வைத்து இவரது பிணை மனு நிராகரிக்கப்பட்டது.

இவரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எவ்வளவோ வாதாடியும் இவரை வெளியே எடுக்க முடியவில்லை.

அதன் பின், கல்கிசை எல்லைக்குள் வசித்து வரும் பெண்மணி ஒருவர் பிணை எடுக்கும் படி, வாலிபரின் உறவினரால் அழைத்து வரப்பட்டார்.

அப் பெண்ணிடம் அவர் நீண்ட காலமாக அங்கு வசிக்கின்றாரா அல்லது தற்காலிகமாகவா என வினாக்கள் தொடுக்கப்பட்டன.

அவர் தான் நீண்ட காலமாக அங்கு வசிப்பதாகவும், தனது மகன் கல்கிசையில் உள்ள பாடசாலை ஒன்றில் படிப்பதாகவும் தெரிவித்தார்.

அதன் பின் அவர், கூறியவை உண்மை என திருப்தி அடைந்த நீதிவான் இவ் வாலிபரை பிணையில் செல்ல அனுமதித்தார்.

ஆனால் பொலிஸார் கைப்பற்றிய "தடயப் பொருளான", 'கமெரா' இன்னமும் திருப்பி கையளிக்கப்படவில்லை.

"பிலிம் சுருள்" பரிசோதனை இன்னமும் முடிவடையவில்லை என்றும், இதற்காக அவர் மீண்டும் நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது

கனடா தூதரக அதிகாரி ஒருவரும் கனடாவில் இருந்து வந்த வெள்ளைக்கார நண்பரும் நீதி மன்றத்திற்கு வந்திருந்து நடந்தவற்றை அவதானித்தனர். (ஐ-5)

### பகவத்கீதை தொடர் விரிவுரை

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் கடந்த மாதம் 26 ஆம் திகதி முதல் பகவத்கீதை தொடர் விரிவுரை வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா இவ் விரிவுரை வகுப்புகளை ஆரம்பித்து வைத்தார்.

ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளிக்கிழமைகளில் இவ் விரிவுரை இடம்பெறும்.

இதேவேளை மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு என 5 ஆயிரம் ரூபாவையும் பாடசாலை நூலகத்துக்கு நூல்களையும் மற்றும் மாணவர்களுக்கு பயிற்சிப் புத்தகங்களையும் சுவாமி சித்ரூபானந்தா அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (ஐ-14-31)

கண்டுபிடிப்பவர்களுக்கு
ரூபா 10 லட்சம் சன்மானம்!
விவரம் நாளைய உதயனில்....

ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 — 12 — 1941

மறைவு: 22 — 05 — 1994

பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகவும், கொண்டை ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட

அமரர் அம்பிகாபதி பாலசுந்தரம்

[முன்னைநாள் வவுனியா நகரசபையின் உள்ளகக் கணக்காய்வாளரும், உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத் தலைவரும்]

திதி: 10 - 06 - 1995

ஆண்டொன்று ஆகிடினும் நின் நினைவு எமதுள்ளத்தை விட்டகலாது நீவிர் மறைந்தும் மறையாது எம்முடன் வாழ்கின்றீர். எம் நெஞ்சிருக்கும் வரை உமது நினைவிருக்கும்.

உமது பிரிவால் வாடும்:
தாய், மனைவி, மக்கள்.
[கொழும்பு பன்சிஹவுஸ் யாழ்ப்பாணம்]

ஆறுகாலமடம்,
ஆனைக்கோட்டை.

(37016)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டி - வேவில் வீரகத்தி விக்னேஸ்வரர் தேவஸ்தானம்

## விநாயகர், சண்டேஸ்வரர் சித்திரத் தேர்கள்

# வெள்ளோட்ட விழா சிறப்பு மலர்

(10 - 06 - 1995)

## ஒன்றுபட்ட வாழ்வுக்கு எடுத்துக்காட்டு

ஸ்ரீ வீரகத்தி விக்னேஸ்வரப் பெருமானின் திருவடிகளை திரிகரண சுத்தியோடு இறுகப் பற்றிக் கொண்டால் வேண்டியவெல்லாம் கைகூடும். பெறலாம் ஐங்கரனின் திருவருளை என உளமார வேண்டி எல்லோருக்கும் எமது நல்லாசிகளை வழங்குகின்றோம். தேர் நிர்மாணிப்புக் குழுவினர்களையும், ஆலயக் குருமார்களையும், ஆலயத் தொண்டர்களையும் தேர் நிர்மாணிப்புக்கு உதவி செய்த பெருமக்களையும் வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்

## மூர்த்தி தலம் கொண்ட கோயில்

வேவில் விநாயகர் மூர்த்தி தலம் தீர்த்தம் விஷேடம் பெற்ற ஆலயமாகும். இவ் ஆலயச் சூழலில் தல விருட்ச மரங்களான ஆல், அரசு வன்னி மரங்கள் அழகூட்டுகின்றன. ஆலய முன்றிலில் பசுமையான தோட்டங்கள் காட்சியளிக்கின்றன. இவ்வாறு இயற்கைச் சூழல் நிறைந்த இடத்தின் மையத்தில் விநாயகப் பெருமான் கோவில் கொண்டெழுந்தருளி இவ்வூர் மக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார். மூர்த்திகரம் கொண்ட விநாயகர் என்பதற்குச் சான்று 1987 ஆம் ஆண்டு நடைபெற்ற ஈழப்போரின் இவ்வாலயத்துள் தஞ்சம் புகுந்த அடியார்களுக்கு எந்தத் தீங்கும் ஏற்படவில்லை.

இவ் விநாயகப் பெருமானுக்கு வல்வெட்டி வாழ் சைவப் பெருமக்கள் பெரும் பொருட் செலவில் புதிய சித்திரத் தேர் ஒன்றினைஉருவாக்கி இன்று 10 - 06 -1995 தேரின் வெள்ளோட்ட விழாவினை நடத்த தீர்மானித்திருக்கின்றார்கள்.

இந்நாளில் விநாயகர் அடியார்கள். சுபீட்சமான நன்வாழ்வு பெற்று பெருவாழ்வு பெற வேவில் விநாயகரின் ஆசிகள் என்றென்றும் கிடைக்க வேண்டும்.

சிவஸ்ரீ சு. வேதாரணியக் குருக்கள்
பிரதமகுரு.

## அடியார்கள் அருள் பெறுவார்களாக

ஆலயங்களில் நடைபெறும் மகோற்சவங்களில் இரதோற்சவம் அழித்தல் தொழிலைக் குறிக்கின்றது. வல்வெட்டி வேவில் வீரகத்தி விக்னேஸ்வரர் ஆலயத்தில் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட வைபவத்தில் கலந்து கொண்டும் இக் கோயில் சம்பந்தமான மற்றைய திருப்பணிகளுக்கும் தாராளமாக உதவி செய்து கொண்டும் இருக்கும் அடியார்கள் வேவில் விநாயகரின் பூரண அருளைப் பெற்று எல்லா வாழ்க்கை நலன்களையும், அடைவார்களாக,

சிவஸ்ரீ
சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் (J. P)
(அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபைத்-தலைவர், வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் பிரதமகுரு)

## திருப்பணிகள் முடிவதில்லை

பணிகளில் சிறந்த பணி ஆலயத் திருப்பணியாகும். இந்த வகையில் நாம் எடுத்துக்கொண்ட பணி, தேர்திருப்பணி இன்றைய காலகட்டத்தில் பெரும் பொருள் செலவில் ஓர் பணியை நிறைவு செய்வதென்றால் மிகவும் கஷ்டமான காரியமாகும். ஆனால் எமது கிராம முதியோர் செய்த திருவினையால் இன்று நாம் இப்பணியை தலைமேல் கொண்டு இறைவன் கருணையினாலும், அடியார்களின் பங்களிப்பினாலும், ஆதீனகர்த்தாவின் அனுசரணையினாலும், ஆலோசனையினாலும், இப்பணியை ஓரளவிற்கு நிறைவு செய்துள்ளோம் எப்படி சித்திரத்தேர் பணிநிறைவு பெற்றதோ அதேபோன்று தேர்க்கொட்டகையும் அமைக்கப்படவேண்டும் என்பது எமது பேரார்வமாகும் திருப்பணிகள் முடிவதில்லை. பணிகள் தொடரட்டும்

க. கதிர்காமத்தம்பி
தலைவர், தேர்த்திருப்பணிச்சபை.

## 150 வருட கால வரலாறு கொண்ட

# வீரகத்தி விக்னேஸ்வரர் ஆலயம்

இவ்வாலயமானது 1845ஆம் ஆண்டு காலப்பகுதியில் இக்கிராமத்தில் சைவத்தையும் தமிழையும் வளர்த்து வந்த சிவஸ்ரீ ஆறுமுகக் குருக்களால் தோற்றுவிக்கப்பட்ட ஆலயமாகும் குருக்கள் தமது ஊரில் ஓர் ஆலயம் இல்லையே என்று பல நாட்களாக இறைவனை வேண்ட இறைவன் ஐயாவின் கனவில் ஆனைமுகமும் அழகிய திருவும் கொண்டு மிகக் கம்பீரத்துடன் காட்சி கொடுத்து எனக்கு இந்த இடத்தில் ஆலயம் அமைத்து வழிபடுக என்று ஆலயம் அமைக்க வேண்டிய இடத்தைக் குறித்து தெய்வீக வாக்கு கொடுத்து மறைந்தருளினார்.

கண்விழித்துப் பார்த்த குருக்கள் குறிப்பிட்ட இடத்தில் சென்றுபார்த்த போது அவ்விடத்தில் பலதரப்பட்ட மலர்கள் உதிர்ந்து கிடக்கக் கண்டார். குருக்கள் ஊர்மக்களை அழைத்து நடந்தவைகளைக் கூற மக்கள் மகிழ்சியடைந்து அந்த இடத்தில் குருக்களுடன் சேர்ந்து ஓர் சிறிய ஆலயத்தை அமைத்தனர். குருக்கள் நித்திய பூசையை செய்தார். இவ்வாலயமே இன்று வல்வெட்டி வேவில் வீரகத்தி விக்னேஸ்வரர் ஆலயமாகத் திகழ்கிறது.

குருக்களைத் தொடர்ந்து குருக்களின் புத்திரராகிய சின்னையா குருக்கள் கர்ப்பக்கிரக மண்டபம் உள்வீதி,



வெளிவீதி ஆகியவற்றை அமைத்து இரண்டுகாலம் பூஜையும் செய்து வந்தார். சின்னையாக் குருக்கள் சிவபதப் பேறடைய சின்னையாக் குருக்களின் மகன் சுவாமிநாதக் குருக்கள் தொடர்ந்து ஆலயத்தை பராமரித்தும் நித்திய பூசைகளை சிறப்பாக நடத்தியும் வந்தார். சுவாமிநாதக் குருக்களுக்குப் பின் அவரின் மைத்துனரான சுப்பிரமணியக் குருக்கள் தமது காலத்தில் தாசனமண்டபம், நிர்த்த மண்டபம், தம்ப மண்டபம், வசந்தமண்டபம், தேர், வாகனங்கள் முதலிய திருப்பணிகள் செய்து 1959ஆம் ஆண்டு சித்திரை மாதம் மகா கும்பாபிஷேகத்தையும் நடத்தி வைத்தார்.

ஐயாவின் காலத்தில் ஆலயத்தில் நடைபெற்ற அலங்கார உற்சவம் வைகாசி பூரணையை தீர்த்த உற்சவமாகக் கொண்டு பத்துநாட்கள் மகோற்சவம் நடத்தப் பட்டது. ஐயாவின் காலத்திற்குப் பின் அன்னாரின் மருமகனான திருச்சிற்றம்பலம் ஐயா கோயிலைப் பொறுப்பேற்று ஊர்மக்களின் உதவியுடன் மணிக்கூட்டுக் கோபுரம், அசையாமணி என்பவற்றைச் செய்தும், ஓட்டால் வேயும் கொட்டகைகளாக மாற்றி அரிய திருப்பணிகளைச் செய்தார். 1973 இல் திருச்சிற்றம்பலம் ஐயா விநாயகப் பெருமானின் திருவடியினை அடைய அவரின் மகனாகிய கமலநாதன்ஐயா ஆலயத்தின் பொறுப்பையேற்றார்.

கமலநாதன் ஐயாவின் காலத்தில் பரிவாரமூர்த்திகளுக்கு தனித்தனி ஆலயம் அமைக்கப்பட்டு கர்ப்பக்கிரகஸ்தாபி புதிதாக அமைக்கப்பட்டு 1980ஆம் ஆண்டு தைத்திங்கள் மிருகசீரிட நட்சத்திரத்தன்று சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் அவர்கள் குருவாக இணைந்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இக் கும்பாபிஷேகத்தை தொடர்ந்து பூங்காவன மண்டபமும், நவக்கிரகம், சண்டேஸ்வரர் போன்றனவும் பஞ்சமுக விநாயகர் எழுந்தருளையும் செய்விக்கப்பட்டது. இவ்வாறு அரிய திருப்பணிகளைச் செய்தும், செய்வித்தும் தெய்வீகப் பணி புரிந்த கமலநாதன் ஐயா வெளிநாடு சென்றார்.

கமலநாதன்ஐயா வெளிநாடு சென்றதைத் தொடர்ந்து அவரின் சகோதரரான எம்மால் இவ் வாலயம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. விநாயகப் பெருமானின் கருணையும் இக் கிராம மக்களின் நல்லாதரவையும் துணை கொண்டே இவ் வாலயத்தை அடியேன் பரிபாலிக்கின்றேன். அடியேனுடைய உள்ளமும் இக் கிராம மக்களின் உள்ளமும் பூரிப்பு அடையும் படியாக விநாயகப் பெருமானுக்கும், சண்டேஸ்வரப் பெருமானுக்கும் சித்திரப் பெரும் தேர்கள் அமைக்கப்பட்டு இன்று (10-06-95) வெள்ளோட்டம் நடைபெறுகின்றது. எம்பெருமான் 12-06-95 அன்று இச் சித்திரத் தேர் ஏறி அடியார்களின் பாவங்களை பொடி செய்து அவர்களுக்கு நல்லருள் பொழிய வேண்டும் என்று விநாயகப் பெருமானின் திருப்பாதங்களை இறைஞ்சுகின்றேன்.

தி. விக்கினேஸ்வரன் ஐயா
ஆதீனகர்த்தா.

## வெள்ளோட்ட விழா நிகழ்ச்சிகள்

காலம்: 10 - 06 - 1995 சனிக்கிழமை மாலை 3-00 மணி
தலைவர்: திரு. க. கதிர்காமத்தம்பி [தேர்த் திருப்பணிச் சபைத் தலைவர்
பிரதம விருந்தினர்: திரு சுந்தரம் டிவகலாலா
[கூட்டுறவு அபிவிருத்தி]ஆணையாளர் வடக்கு-கிழக்கு மாகாணம்
மங்கள இசை:
ஆசியுரைகள்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
[நல்லை ஆதீன முதல்வர்]
சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் J. P.
[வல்லை முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதம குரு]
மஹோற்சவ பிரதம குரு சிவஸ்ரீ ச. மகாலிங்கசிவக் குருக்கள்
[நாயன்மார்கட்டு, அரசடிப் பிள்ளையார் கோவில் பிரதம குருவும், ஆதீன கர்த்தாவும்]
பிரதம விருந்தினர் உரை:
சிறப்புரைகள்; பேராசிரியர் திரு அ. சண்முகதாஸ்
(தலைவர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்)
திரு. எஸ். சிவலிங்கராஜா எம். ஏ
(சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
திரு. எம். வேதநாதன், எம். ஏ
(சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்
பா. கணேசலிங்கம் விஞ்ஞான ஆசிரியர்
(மந்துவில், றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை)
சித்திரத்தேர் சிறப்புமலர் வெளியீட்டுரை: திரு. முத்துச்சாமி ஆசிரியர்
சித்திரத்தேர் சிறப்புமலர் வெளியீடு:
சிற்பச் சக்கரவர்த்தி: திரு. ஆ. ஜீவரட்ணம் ஆச்சாரியாரை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்
பொன்னாடை போர்த்தி கௌரவிப்பவர்: திரு. ச. இரத்தினகோபால்
(ஜெகா மோட்டோஸ் நெல்லியடி)

## வடம்தொட்டு இடம் பிடிப்போம்

இக் கிராமங்களின் பூர்வ புண்ணிய பலத்தினாலும் ஆதீன கர்த்தாவின் பெரும் முயற்சியினாலும் தேர்த் திருப்பணிச் சபையின் இடைவிடாத உற்சாகத்தினாலும். அடியார்களின் பெரும், தொகையினாலும், இளைஞர்களின் சிரம உழைப்பாலும் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயத்தின் நூற்றியிருபத்தைந்தாவது தேராக இன்று 10 - 6 - 95 சித்திரத் தேர் வெள்ளோட்ட பவனி வருகின்றதை அறிந்து நாம் அளவில்லா உவகை கொள்கின்றோம்.

எமது வாழ்க்கையை நாமே தேர்ந்து கொள்ள வேண்டும் என்றுதான் எல்லா ஆலயங்களிலும் தேர்திருவிழா சிறப்பாக நடத்தப்படுகின்றது. "தேர் தேர்ந்துகொள்" தேரைப் பார்த்து தேர்ந்து கொள்ள வேண்டும் என்றுதான் உலகத்தில் இறைவனின் படைப்புகள் அனைத்தையும் சித்தரித்து காட்டுகின்றார்கள்:

எல்லா மக்களும் ஒன்றுசேரும் நன்னாளான தேர்த் திருவிழா நாளில் (12 - 6 - 95) எல்லோரும் வடம்தொட்டு வானகத்தில் ஓர் இடம் பிடிப்போம் என்று வாழ்த்தி தும்பிக்கையானை நம்பிக்கையோடு வேண்டி நிற்போமாக!

சிவஸ்ரீ ச. மகாலிங்கசிவக்குருக்கள்,
அரசடிப்பிள்ளையார் கோயில்,
நாயன்மார்கட்டு.

## சிற்பாலயத்தின் 125 ஆவது தேர்

எல்லாம் வல்ல வேவில் விக்கினேஸ்வரப் பெருமானுக்கு அழகிய சித்திரத்தேர் ஒன்று உருவாகியிருக்கின்றது. தமிழ் மக்களின் தெய்வீகப் பண்புகளை நிலைநிறுத்தும் பண்பாட்டுக்கலைச் சின்னமாகச் சித்திரத்தேர்கள் விளங்குகின்றன.

அழகிலும், அமைப்பிலும் தெய்வீகத் தன்மையிலும் சிறந்து விளங்கும் இச் சித்திரத் தேர் எமது ஆறுமுகம் சிற்பாலயத்தின் நூற்றி இருபத்தைந்தாவது தேர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயன்றி வேறொன்றறியேன் பராபரமே" என்ற அதியுயர்ந்த சைவப் பண்பாட்டின் குரல் என்றும் எவ்விடத்தும் நின்று ஒலிக்க வேண்டும். கலையும் தெய்வீகமும், தெய்வீகமும் கலையும் என்றும் ஒன்றானவையே.

வல்வெட்டி வேவில்பதி விக்கின விநாயகர் இச்சித்திரத்தேர் இவர்ந்து எல்லோர்க்கும் எல்லா நலனும் பாலிக்க வேண்டுமென்று மனமொழி மெய்களால் வேண்டுகிறேன்.

ஸ்தபதி ஆ. ஜீவரத்தினம் ஆச்சாரி
அதிபர், ஆறுமுகம் சிற்பாலயம்,
திருநெல்வேலி.
(விளம்பர இல: சி/1465)

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

ஏழு வாரங்கள் நிரம்பிய ஜேர்மன் ஷெப்பேர்ட் இன ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தகப்பன் நாய் பார்வைக்குண்டு. தொடர்பு: S. V குருபாதம், இல. 57 புங்கன்குளம் வீதி (புங்கன்குளம் புகையிரத நிலையம் முன்பாக), அரியாலை, யாழ்ப்பாணம்
(37008)

போட்டோ ஸ்ருடியோ வீற்கோ அல்லது றெக்கோடிங்பாருக்கோ பாவிக்கக் கூடிய கண்ணாடி பிறேமுடன் (5) செற்றாக விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 107, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (பழைய பொலீஸ் நிலையம் அருகில்).
[36981]

நல்லின பொமரேனியன் நாய்க்குட்டிகள் மற்றும் Dashoud பெண் நாயும் விற்பனைக்குண்டு நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை. முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(36995)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 2ஸ்ரீ மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். இல. 173/10, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [36997]

தமிழ் ஈழத்தில் இனவிருத்தி செய்யப்பட்ட Jawa Sparrows குருவிகளும், Ankora இன சடை முயல்களும் உடன் விற்பனைக்குண்டு. மனோன், அரசடி, நவாலி தெற்கு. மானிப்பாய். (86985)

### பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டு 3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L வகுப்புகளுக்காக ஒவ்வொரு மாதமும் பயிற்சி வினாத்தாள்கள் [விடைகளுடன்] எம்மால் வெளியிடப்படுகின்றன. மே மாதத்திற்கான பயிற்சி வினாத்தாள்கள் 27-5-95 சனி முதல் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[8557]

### இறைச்சிக்கோழி

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் தினமும் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். எங்கள் ஸ்தாபனத்திற்கு முகப்பில் இருக்கும் விற்பனை நிலையம் எங்களுடையதல்ல. உங்கள் வசதிக்காக எங்கள் வாசலில் Nallur Video Centre பெயர்ப்பலகை உண்டு. (36994)

### A/L மாணவர்களுக்கு

வர்த்தகமும் நிதியும் 1990—1994 வரை 1992—1991 விசேட பேப்பர் கடந்த கால வினாக்களும் விடைகளும் பொருளியல் 1990—1994 வரை 1990—1991 விசேட பேப்பர் கடந்த கால வினாக்களும் விடைகளும் ஆக்கம் E. செல்வநாயகம் (Royal College) விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக சாலை யாழ்ப்பாணம்.
சி-1487]

### மணமக்கள் தேவையா?

பொருத்தம் பார்த்துத் திருமணம் செய்து தரப்படும். எல்லாவித தகைமைகளிலும் மணமக்கள் இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமை [illegible] வும். மங்கள [illegible] தொய்யாத்தோட்டம்.
(37006)

### ஆண்டு 5 புலமைப்பரிசில்

அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட புதிய பாடத்திட்ட மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தொகையாகப் பெற விரும்புபவர்களுக்கு 25% கழிவுண்டு. Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8558]

### தேவை

றபர் ஸ்ராம்ப், பிளாஸ்ரிக் நேம் போட், ஸ்கூல் பட்ஜ், நம்பர் பிளேட், விளம்பர போட் தயாரிக்கும் எமது ஸ்தாபனத்துக்கு பெண் உதவியாளர் உடன் தேவை. தொடர்பு: "வீமா", இல. 272, நாவலர் வீதி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம்.
(36996)

"போட்டோஸ்ரட்"

### திறப்பு விழா அழைப்பு

பேரன்புடையீர்!

நிகழும் மங்களகரமான யுவ ஆண்டு வைகாசித் திங்கள் 27ஆம் நாள் இன்று (10 - 06 - 1995) சுவாதி நட்சத்திரத்தில் காலை 6-17 — 7-53 வரையிலுள்ள சுபவேளையில் இறைவன் திருவருளால் போட்டோஸ்ரட், றோணியோ, தட்டச்சு. பிளாஸ்டிக் காப்புறை வேலைகள் ஆரம்பிக்கவுள்ளோம்.

வாடிக்கையாளர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

★ தங்கள் நல்வரவை நாடும் ★

க. மு. பத்மநாதனும், குடும்பத்தினரும்,
யசும், மருத்தகம் (வெஸ்கோ)
[illegible] பீ. டி முன்பாக)
யாழ்ப்பாணம்.
[சி-1448]

### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

பிரதி அதிபராகப் பணி புரிந்து
ஓய்வு பெறும்
எமது சங்கத்தின் உப தலைவர்
**வண்ணை சே. சிவராஜா**
அவர்களின்
சேவை நலம் பாராட்டும் விழா
இன்று நடைபெறுவதை ஒட்டி
அவர்களை வாழ்த்துகிறோம்.
பழைய மாணவர் சங்கம்.
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
10 - 06 - 1995 (சி-1444)

முருகன் துணை

### தெய்வீக பண்ணிசை விருந்து

இடம்: நெல்லியடி தடங்கன்புளியடி முருக மூர்த்தியாலயம்
காலம்: 11-06-95 ஞாயிறு காலை 11-00 மணியளவில்
பண்ணிசை நிகழ்த்துபவர்:
சங்கீதபூஷணம்
திரு. நா. வி. மு. நவரத்தினம்
அவர்கள்
(தலைவர், தமிழ் இசைத்துறை யாழ். பல்கலைக்கழகம்)
பக்கவாத்திய குழுவினருடன் நடைபெறும்
★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ★
— உபயகாரரும், பரிபாலனசபையினரும்.
[சி-1467]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு – 5 புலமைப்பரிசில்

ஆண்டு – 5 புலமைப் பரிசில் 95 பரீட்சைக்காக புதிய பாடத்திட்டப்படி பயிற்சி வினாத்தாள்கள் [விடைகளுடன்] ஒவ்வொரு மாதத்தின் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. அடுத்த வெளியீடு 11 – 6 – 95 பயிற்சி வினாத்தாள்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

BOND
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[8582]

# தொடர்பு சாதனங்கள் மீது பூரண தணிக்கை வரும்

தொடர்பு சாதனங்கள் மீது பூரண தணிக்கையைத் திணிக்க அரசாங்கம் முழு மூச்சாக முயற்சிக்கிறது எனத் தெரிய வருகின்றது.

தொடர்புச் சாதனங்களில் சில பகுதியினர் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்கின்றனர், அவர்கள் பொதுமக்கள், அரசாங்கம் அளித்த சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்கின்றார்கள் என்று ஜனாதிபதி சந்திரிகா சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்தே தணிக்கைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தணிக்கை பற்றிய புதிய சட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக நாலு உயர்மட்டக் கூட்டங்கள் ஏற்கனவே நடைபெற்றுள்ளன எனவும், பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இந்தப் பணிக்குப் பொறுப்பாக இருக்கிறார் எனவும் அறிய வருகிறது. (ஊ)

RADIO & ELECTRONICS

★ A/L 97 பௌதிகவியல் பாடத்தில் இலத்திரனியல் அலகு புதிதாக இணைக்கப்பட்டுள்ளதால் இத்துறை சார்ந்த மாணவர்கள், ஆசிரியர்களுக்கு இப்பயிற்சி நெறி பயனளிக்கக் கூடியது.

★ பல்கலைக்கழக மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.

★ மின் பிறப்பாக்கி மூலமாக செய்முறைப் பயிற்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

★ தனிக்குழுக்களாக சேருமிடத்து பிரத்தியேக வகுப்புக்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.

★ இது ஒரு முற்று முழுதான தொழிற் பயிற்சி நெறியாகும்.

ஆரம்பம்: 14 – 06 – 1995
DURATION: 5 Months

மேலதிக விவரங்களுக்கு;

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. PETER'S LANE, JAFFNA.
(சி-1464)

G. C. E. A/L 96
ENGLISH LITERATURE
BY:
S. Pathmanathan

ஆரம்பம்:
10 – 06 – 95
(9.00 a.m.)

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம.
(சி-1466)

# இராணுவத்தில் இருந்து தப்பியோடிய 24 ஆயிரம் பேருக்குபொது மன்னிப்பு!

கொழும்பு, ஜூன் 10

இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய 24 ஆயிரம் பேருக்கும் பொது மன்னிப்பு அளிக்கப் பட்டுள்ளதாக, இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது.

வடக்கு– கிழக்கில் நடைபெற்று வரும் போரினால் இராணுவ எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதனை சரிக்கட்டும் முகமாகவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நடைபெறும் போரில் பெருமளவு இராணுவத்தினர் கொல்லப்படுகின்றனர். இதைவிட பெரும் எண்ணிக்கையானோர் காயங்களுக்கு உள்ளாகின்றனர்.

இன்னும் பலர் இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிவிட்டனர் மற்றும் சிலர் ஓய்வு பெற்று விட்டனர்.

இத்தகைய நிலைமைகளினால், தரைப்படையை இயக்கக் கூடிய போதுமான பலம் அற்ற நிலையில் தாம் இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

போருக்கான முயற்சிகளை மேலும் அதிகரிப்பதற்காக ''போருக்கான பட்ஜெட்'' ஒன்றும் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

சமாதான முயற்சிகள் முறிவடைந்ததை அடுத்தே இராணுவத்தை விட்டு ஓடியவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-5]

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 10

உடுவில் கிழக்கு சனசமூக நலனோன்பு மூலவள நிலையத்தின் படிப்பகம் திறப்பு விழா இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

நிலையத் தலைவர் திரு. வ. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தெற்கு பிரதேச செயலாளர் திரு ஆ. மகாலிங்கம் கலந்து கொள்வார். [ஐ-14]

## நிறுத்தல் அளவை உபகரணங்கள் முத்திரையிடல்

யாழ்ப்பாணம், ஜூன் 10

வட்டுக்கோட்டை பிரதேச சபைக் காரியாலயத்தில் வைத்து எதிர்வரும் 15, 16 19, 20 ஆகிய திகதிகளில் நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படும்.

இதேவேளை யாழ். செயலக நிறுத்தல் அளவைகள் பரிசோதகர் பகுதியில் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

காலை 8. 30 மணி முதல் பிற்பகல் 1. 30 மணி வரை முத்திரையிடும் வேலைகள் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14)

வன்செயல் நடவடிக்கையால்

# சேதமான கட்டடங்களுக்கு நஷ்டஈடு வழங்கமுடிவு

கொழும்பு, ஜூன் 10

வன்செயல் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட, சேதமாக்கப்பட்ட தொழிற்சாலைகள், கைத்தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கு நஷ்டஈடு வழங்கும் நோக்குடன் விவரங்களை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு கோரியுள்ளது.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் திகதிக்கு பின் பாதிக்கப்பட்டவர்கள் இந்த விவரங்களை சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு விவரங்களை அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

திருமலைப் பகுதிக்கு நியமனமான

# ஏ. எஸ் பிக்கள் எண்மர் பதவியேற்க பின்னடிப்பு

கொழும்பு, ஜூன் 10

திருகோணமலை மாவட்டத்தில் கடமையாற்ற நியமிக்கப்பட்ட 10 உதவி பொலிஸ் அத்தியட்சகர்களில் (ஏ எஸ். பிக்கள்) இருவரைத் தவிர ஏனையோர் தமது கடமைகளை பொறுப்பேற்கவில்லை என தெரிய வந்தது.

இங்கு நடைபெற்று வரும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் தாங்களும் பலியாக நேரிடும் என்ற அச்சம் காரணமாகவே இவர்கள் வேலைகளுக்குச் சமுகமளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குச்சவெளி, மூதூர், உப்புவெளி, சீனன்குடா ஆகிய பொலிஸ் பகுதிகளுக்கு நியமிக்கப்பட்டோரே இவ்வாறு தமது கடமைகளுக்குச் செல்லாத ஏ. எஸ். பிக்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

# பாவனையாளர் பாதுகாப்பு குழுக்கள் மறுசீரமைப்பு

வலிகாமம் தெற்கு, ஜூன் 10

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இடங்களில் பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் திரு. நா. வேதநாதன் தலைமையில் புனரமைப்பு செய்யப்பட்ட இக் குழுவினர் –

பொதுமக்களுக்கான உணவு சிரான விநியோகம், விற்பனை செய்யப்படும் பொருள்களின் தரம், சுகாதார நிலைகள் என்பவற்றை அவதானித்து, செயற்பட்டு வருகின்றனர். (ஐ-152)

வளலாய் ராணுவ அச்சுறுத்தலால்

# 6 மைல்கள் சுற்றி வரும் வடமராட்சி பஸ்கள்!

யாழ்ப்பாணம், ஜூன் 10

வளலாயில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் வல்லைப் பாலத்தினூடான போக்குவரத்தை குறிவைத்து தாக்குதல் நடத்தி அச்சுறுத்தி வருவதால் —

வடமராட்சிக்கான மினிபஸ் சேவைகள் சுமார் 6 மைல்கள் மேலதிகமாகச் சென்று வருவதாக யாழ். மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணைய வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது யாழ். மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணைய பயணிகள் மினிபஸ்கள் வடமராட்சிக்கான அதன் சேவையை ஆவரங்கால் கப்புதூ வழியாக நடத்து வருகின்றன.

இதனால் வடமராட்சிக்கான பஸ் கட்டணமும் 25 ரூபாவில் இருந்து 27 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. [ஒ-4]

## ஏறாவூரில் சிங்களவர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜூன் 10

ஏறாவூர் பொலிஸ் பிரிவில் உள்ள முறக்கொட்டாஞ்சேனையில் வசித்துவந்த முதியான்சலாகே பியதாச (வயது 48) என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவரது மனைவி தமிழர் என்றும் இவர்கள் 15 வருடங்களாக இணைந்து குடும்பம் நடத்தி வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

தேநீர் குடித்துக் கொண்டிருந்த சமயம் இனம்தெரியாத இளைஞர் சிலர் இவரை வீட்டுக்கு வெளியே அழைத்துச் சென்று சுட்டு விட்டுத்தப்பிச் சென்றுள்ளார்கள். (ஒ-5)

## மானியக் கடன் பெறுவோர் விவரம்

இவ்வாண்டுக்கான வீடமைப்பு மானியம், வீடமைப்புக் கடன் பெறுவதற்கு பளைப் பிரதேச மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் பளைப் பிரதேச செயலகத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இப் பட்டியல் வீடமைப்பு மானியத் திட்டத்தில் 28 பேருக்கு நெளிவு தகரமும் 7 பேருக்கு பணமும், வீடமைப்புக் கடன் திட்டத்தில் 14 பேருக்கு நெளிவு தகரமும் பணமும் 14 பேருக்கு பணமும் கடனாகவும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வீடமைப்பு மானியத்திற்கு 35 பேரும், வீடமைப்புக் கடனுக்கு 28 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-117)

உ
சிவமயம்

மங்களகரமான திறப்பு விழா

★ சிங்கன் தையல் இயந்திர வாணிபம் ★

இன்று (10 – 06 – 1995) சனிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் 8 மணிவரை வரும் சுபவேளையில் திறந்து வைக்கப்படுகின்றது.

சகல விதமான தையல் இயந்திரங்கள், சகல விதமான உதிரிப்பாகங்கள் விற்பனையும், சிறந்த முறையில் திருத்தியும் கொடுக்கப்படும்.

சிங்கன் தையல் இயந்திர வாணிபம்
இல: 107A, காங்கேசன்துறை நெடுஞ்சாலை,
சுன்னாகம்.
(பழைய பொலீஸ் நிலையம் அருகில்)
[37009]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திதி: 10 – 06 – 1995





| அமரர் | செல்வி | செல்வி |
|---|---|---|
| வே. சின்னத்தம்பி | சி. சிவதர்ஷினி | க. புஷ்பராணி |
| (முன்னாள் நீர்வேலி ப.நோ. கூ. சங்கத் தலைவர்) | (வேம்படி மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி) | (நீர்வேலி மத்தி) |
| தோற்றம்: 15 – 02 – 1930 | தோற்றம்: 29 – 10 – 1976 | தோற்றம்: 17 – 07 – 1966 |
| மறைவு: 22 – 05 – 1994 | மறைவு: 22 – 05 – 1994 | மறைவு 22 – 05 – 1994 |

''உயிருடன் நேசித்தவர்கள் மரணத்திலும் நேசியுங்கள்''

எமதன்புத் தெய்வங்களே! ஆருயிர் செல்வங்களே ஓடியதே ஆண்டு ஒன்று உமைப் பிரிந்து. ஆறவில்லை உங்கள் நினைவுச் சிதறல்கள்.

22 – 05 – 1994 அன்று வானத்தில் வந்த விமானங்கள் மூன்று வட்டமிட எம்மேலே போட்டதுமே குண்டுகள் ஒன்பதை.

பாசத்தின் பிணைப்போடு நின்ற செல்வங்களை பதை பதைக்க வதை செய்தனவோ.

அன்புக்கும் பாசத்துக்கும் உரியவர்களே உங்கள் இழப்பு எழுத்தில் வர்ணிக்க முடியாது. நினைவுகள் அழிவதில்லை. நீண்டு கொண்டே போகும்.

சோதனைகள், வேதனைகள், கடமைகள் சரிந்துவிட்ட வாழ்வோ மீண்டும் சீர்ப்படுவதில்லை.

10 – 06 – 1995 ஓர் ஆண்டு திதி ஆனபடியால் இன்று பகல் 11-00 மணிக்கு ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் உங்கள் உருவப்படத்துக்கு மலர் அஞ்சலியும் கண்ணீருடன் செலுத்துகிறோம்

சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்.

''சிவாவாசம்''
நீர்வேலி.

[36963]

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
இராஜசிங்கம் இராஜமனோகரன்
(பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்)

தோற்றம்: 07 – 07 – 1934
மறைவு: 25 – 05 – 1991

திதி: 10 – 06 – 1995

வீட்டின் ஒளி விளக்காய் இருந்து பாசமுடன் எம்மை வளர்த்து திடீரென எங்களை விட்டு பிரிந்த அப்பாவின் ஆத்மா சாந்தியடைய காசி விநாயகரை பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[8433]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி
செல்லத்துரை மீனாம்பாள்

தோற்றம்: 07 – 06 – 1923
மறைவு: 11 – 05 – 1995

எமது அன்புத் தாயே!
சொர்ப்பனத்தில் உமைக் காண்கவென
சொல்லாமல் சொர்க்கம் சென்றதேனோ
பண்புடனே அரவணைத்து
பார்ப்போர் எமைப் போற்ற பக்குவமாய் வளர்த்த தாயே!

எங்கள் குலவிளக்கே
உமது இலணந்த வரம் தேடி இறைவனடி சேர்ந்தீரே
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(கவிலா படக்கடை)

சைவப்பாடசாலை ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு.
யாழ்ப்பாணம்.

(37012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## குருணவ விஞ்சிய சிடன் லக்ஷ்மன்!

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதை அரசு கைவிட்டுவிட்டது. இராணுவத் தீர்வைக்கண்டு தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை முறியடித்துவிடுவதே அதனுடைய இலக்காகும்.

இது விடயத்தில் அது எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் இராணுவத் தீர்வை நாடியதே என்பது பால் போல வெள்ளையாகத் தெரிகிறது.

ஆனால் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் — ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள்—தங்கள் எதிர்நிலைப்பாட்டைக் கூறும் போது தாம் இன்னமும் சமாதான வழியையே நாடுவதாகக் காட்டிக் கொள்கிறார்கள்.

அடிக்கடி வெளிநாடு சென்றுவரும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இதில் சந்திரிகாவை வென்றுவிடும் பாங்கில், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதே அரசின் விருப்பம் என்று இன்னமும் கூறிவருகிறார்!

இவர் (பெயருக்கு மட்டு) ஒரு தமிழராகத் தெரிவதால் சந்திரிகா இவர் மூலம் வெளிநாடுகளில் தான் ஒரு சமாதானத் தேவதை என்ற கருத்தை விதைக்க முயல்கிறார்.

போர் நிறுத்தம் முறிந்த பின்னர்; இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்று அரசு முடிவு செய்த பின்னர் அதனை நியாயப்படுத்துவதற்காகவும், சமாதானத் தீர்வே தமது இறுதி இலக்கு என்று வெளிநாட்டுத் தலைவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்காகவும் —

லக்ஷ்மன் கதிர்காமரை, ஜனாதிபதி சந்திரிகா தமது விசேட தூதுவராகப் பயன்படுத்தி வருகிறார்.

கதிர்காமர் வெளிவிவகார அமைச்சராக இருப்பதாலும், தமிழர் பிரச்சினை குறித்து தமிழரைக் கொண்டே கருத்தைத் திணிப்பது ஏனையோரை நம்ப வைப்பதற்கு இலகுவாக இருக்கும் என்று கருதியும் போலும், சந்திரிகா தமது உண்மையான நிலைப்பாட்டை மறைப்பதற்கு கதிர்காமரை வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்.

எசமானருக்கு விசுவாசமான, நம்பிக்கைக்கு உரிய ஊழியராக கதிர்காமரும் செயற்பட்டு வருகிறார்!

இப்போது பிரிட்டன் சென்றிருக்கும் அமைச்சர் அங்கு பி.பி.சிக்கு வழங்கிய செவ்வியில் தந்திரமாகவும், ஏமாற்றுத்தனமாகவும் பதிலளித்ததை அவதானிக்கலாம்.

விடுதலைப் புலிகளுடன் பேசி அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற விருப்பம் அரசுக்கு இருந்த போதிலும், இன்றைய நிலையில் இராணுவ ரீதியில் தீர்வு காண்பதைத் தவிர வேறு வழியில்லை —

விடுதலைப்புலிகளின் குறைகளை தீர்ப்பதற்கு இராணுவ வழி சிறந்தது அல்ல என்று இராணுவ வழி மூலம் அவர்களுக்குக் காட்டுவதே அரசின் நோக்கம் —

தென்னாசிய நாடுகள் பலவும், புலிகளுடன் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் எனக் கூறுகின்றன. ஆனால் இதில் எப்படி முன்னேறுவது என்பது குறித்த நடைமுறை ஆலோசனை எதனையும் எங்கள் அரசுக்கு அவை தரவில்லை. — என்பன அவரது விடைகள்.

அரசாங்கம் விருப்பம் இன்றியே இராணுவத் தீர்வை நாடியிருப்பதாகவும், போர் தம் மீது திணிக்கப்பட்டதாகவும் காட்டுவதில், பொய்யை நிலை நிறுத்தி மெய்யாக்குவதில் குருணவ விஞ்சிய சிடனாகத் திகழ்கிறார் லக்ஷ்மன்!

சமாதானவழியை ஸ்ரீலங்கா அரசு நாடுவதற்கு வெளிநாடு ஒன்று திட்டம் வகுத்துக் கொடுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார் கதிர்காமர்! இதனைவிடச் சிறந்த அரசியல் பகிடி இருக்கமுடியாது!!

வெளிநாடுகள் அவ்வாறு ஒரு திட்டம் கொடுக்கவில்லையானால், போரில் வெல்ல முடியாவிடினும் அதனை நீடிப்பதே அரசின் நோக்கம் என்பதனைக் கதிர்காமர் சொல்லாமல் சொல்லுகிறாரா — மறுபுறத்தில்?

தாம் கூறுவதை உலக நாடுகள், அப்படியே முற்றாகச் சிரமேற்கொள்ளவிடும் என்று கதிர்காமரும், அவரது தலைவர் சந்திரிகாவும் நம்பினால் அவர்கள் அசடுவழியநேரிடும்!

அமைச்சர் பௌசி நேரில் பார்த்து

# யுத்த கால மருத்துவ சேவைக்கென பொலன்னறுவ ஆஸ்பத்திரி மாற்றம்

கொழும்பு, ஜூன் 10

யுத்தகாலங்களில் துரித மருத்துவ சேவையை வழங்குவதற்கு ஏற்ற வகையில் பொலன்னறுவ வைத்தியசாலை அவசர அவசரமாக அபிவிருத்தி செய்யப்பட உள்ளது.

இதற்கான அவசர உத்தரவை சுகாதார, நெடுஞ்சாலைகள் சமூக சேவைகள் அமைச்சர் ஏ எச் எம். பௌசி வழங்கி உள்ளார்.

கடந்த 4ஆம் திகதி இவ் வைத்தியசாலைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட அமைச்சர் வைத்தியசாலையின் குறைபாடுகள் மற்றும் தேவைகள் என்பவற்றைக் கேட்டறிந்து கொண்டார்.

யுத்தகால தேவைகளுக்கு முகம் கொடுக்கும் வகையில் இவ்வைத்தியசாலையின் வசதிகளை நவீன முறையில் அபிவிருத்தி செய்வதற்கான உத்தரவுகளை அப்போது அமைச்சர் பிறப்பித்தார்.

தற்போது இராணுவம் பாரிய அளவிலான நடவடிக்கை ஒன்றுக்கு தயாராகி வருகின்ற இவ்வேளையில்—

பெரும் எண்ணிக்கையான படையினர் காயமடையக் கூடும் என எதிர்பார்க்கப் படுவதாலேயே அமைச்சர் இந்த உத்தரவை விடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இவர்களுக்கு சிகிச்சை வழங்கும் வகையிலேயே இந்த அவசர அபிவிருத்தி வேலைகள் இடம்பெற உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ-14-5)

அரசின் இந்து மத அழிப்பு நடவடிக்கைகள்:

# கண்டனப் பேரணியில் அணிதிரள அனைத்து இந்துக்களுக்கும் அழைப்பு!

அனைத்து மதங்களையும் சமமாக மதிப்பது போல் வெளியுலகுக்கு பாசாங்கு காட்டிக் கொண்டு இந்துமத அழிப்பு நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இந்த அநீதியை உலகறியச் செய்ய வேண்டிய பொறுப்பு தர்ம உணர்வு கொண்ட அனைத்து இந்துக்களையும் சார்ந்தது.

யாழ். இந்து சமயப் பேரவையின் செயலாளர் திரு. சி. சக்திகிரீவன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்துக்களுக்கு எதிராக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் கண்டித்து நடைபெற உள்ள பேரணி தொடர்பாக விளக்கம் அளிக்கும் கூட்டம் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டம் எட்டமாக எம் மண்ணில் நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளில் இந்துக்கள் திட்டமிட்டு தாக்கப்பட்டு வருகின்றனர். இந்து ஆலயங்களும் அழிக்கப்படுகின்றன

எனவே எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள கண்டனப் பேரணியில் அனைத்து இந்துக்களையும் அணி திரளுமாறு அழைப்பு விடுக்கிறோம்—என்றார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள கண்டனப் பேரணி தொடர்பாக விளக்கம் அளிக்கும் கலந்துரையாடல்களை யாழ். இந்து சமயப் பேரவை பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நடத்தி வருகிறது.

அந்தந்தப் பகுதி இந்து மத அமைப்புகளின் பிரதிநிதிகள் கருத்தரங்குகளில் பங்கு பற்றி வருகின்றனர்

(ஐ)

# ஊழல் விசாரணை ஆணைக்குழு முன் தொண்டமானும் அழைக்கப்படுவார்!

கொழும்பு, ஜூன் 10

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னால், தற்போதைய அரசில் அமைச்சராகப் பதவி வகிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் தொண்டமான் அழைக்கப்படவுள்ளார் என 'யுக்திய' தெரிவிக்கிறது.

ஆணைக்குழு மேற்கொள்ளவிருக்கும் விசாரணைகள் தொடர்பாக தொண்டமான் அழைக்கப்படவுள்ளதாக ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளனவாம்.

ஹில்டன் ஹோட்டல் கொடுக்கல் வாங்கல், பஸ் கொள்வனவுகளில் இடம்பெற்ற ஊழல்கள், சப்புகஸ்கந்த வைநலோன் சிக்ஸ் நிறுவனத்தைக் குறைந்த விலையில் விற்றமை ஆகிய ஊழல்கள் தொடர்பாக தற்போது இந்தக் ஆணைக்குழுவால் விசாரிக்கப்பட்டு வருகிறது.

எயர் லங்காவின் நடவடிக்கைகள், ரயில்வே திணைக்களத்தின் கொடுக்கல், வாங்கல்கள், மில்கோ நிறுவனம், கொழும்பு கொமேர்ஷல் உர நிறுவனத்தின் ஊழல்கள் என பல அரச நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பாக இந்த ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

(ஒ-10)

# இந்தியாவின் நாடுகடத்தல் கோரிக்கை; சட்ட நிபுணர் குழுவின் பரிசீலனையில்

கொழும்பு, ஜூன் 10

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனையும் மற்றும் இருவரையும் கைது செய்து ஒப்படைக்கும்படி, இந்தியா விடுத்துள்ள 3 நாடு கடத்தல் கோரிக்கைகளையும், சட்ட நிபுணர் குழு ஒன்று தற்போது பரிசிலனை செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த கோரிக்கைகளை பாதுகாப்பு அமைச்சு கடந்த புதனன்று சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பித்திருந்தது

கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் கடந்த வாரம் இந்திய அரசு விடுத்த பணிப்புரைக்கு இணங்க, இந்த நாடு கடத்தல் கோரிக்கைகளை இவ்வாற முற்பகுதியில் உத்தியோக பூர்வமாக இலங்கை வெளிவிவகார அமைச்சிடம் சமர்ப்பித்தது.

1991 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு, மேற்குறிப்பிட்ட மூவருக்கும் தொடர்பு இருப்பதன் காரணமாக இந்திய அரசு இவர்களை தேடி வருகிறதுஇலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் குற்றவாளிகளை நாடு கடத்துவதற்கான உடன்படிக்கை எதுவும் இல்லாத போதிலும் நாடு கடத்தலுக்கான பொது நல அமைப்பு உடன்படிக்கையின் கீழ் இதற்கான விதிகள் இருப்பதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

இலங்கையும் இந்தியாவும் பொதுநல அமைப்பின் அங்கம் வகிக்கின்றன.

எவ்வாறாயினும் இந்தியாவின் இந்தக் கோரிக்கை சம்பந்தமாக இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு முன்பதாக, சகல அம்சங்களும் கவனமாக பரிசிலனை செய்யப்பட வேண்டும் என்றும் சட்டமா அதிபர் தெரிவித்தார்.

இலங்கை இதற்கு முன்பும் பல்வேறு நாடுகள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய குற்றவாளிகளை நாடு கடத்தியுள்ளது

ஆனால் கொலைக் குற்றச்சாட்டின் பேரில் குற்றவாளி ஒருவரை நாடு கடத்த கோரிக்கை விடப்பட்டிருப்பது இதுவே முதற் தடவை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ 5)

## புலிகளின் குரல் வானொலியில்

சனி இரவு

10 6 1995

★ 8-02 — புரட்சிக் குரல்
★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
★ 8-20 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — சிறப்பு நிகழ்ச்சி 2ஆம் கட்ட ஈழப்போர்

11 — 06 — 1995

ஞாயிறு காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியில் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

சனி மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
★ 5-30 — அறிவியல் வினாடி-வினா போட்டி
★ 6 00 — சிந்தனைக்கு சில விநாடிகள்
★ 6 02 — பாமாலை
★ 6-15 — என்தெரிவு

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். பல்கலைக்கழக பார்வதி அம்பாள் சமேத பரமேஸ்வரன் ஆலயத்தின் புதிய மஞ்ச வெள்ளோட்ட விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-50 மணிக்கு நடைபெறும்

மாலை 4மணிக்கு புதிய மஞ்சத்தில், சுவாமி வீதி உலா வருவார். (ஒ-14)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக தினத்தை ஒட்டிய அபிஷேகம் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறும்.

20ஆம் திகதி காலை 10 மணிக்கு சங்காபிஷேகம் இடம் பெறும்.

இந் நிகழ்வை முன்னிட்டு தினமும் மாலை 5 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மாவின் 'பிள்ளையார் புராணம்'' சொற்பொழிவு இடம்பெறும்.

(ஒ-14)

★ ★ ★

கொழும்புத்துறை நெடுங்குளம் ஸ்ரீ அம்பலவாண விநாயகர் ஆலய மணவாளக்கோல மகோற்சவம் இன்று சனிக்கிழமை முதல் 21ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறும்.

இதனையொட்டி தினமும் முற்பகல் 11மணிக்கு திரு கார்த்திகேசு கணேசதாசனின் ''கணபதி கடாட்சம்'' என்னும் பொருள் பற்றிய தொடர் விரிவுரை இடம் பெறும். (ஒ-30)

## மத்தியஸ்தர் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கம் புதிய மத்தியஸ்தர்களைப் பயிற்றுவிப்பதற்காக நடத்தும் வகுப்புக்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் பிரதி ஞாயிறு தோறும் யாழ். இந்துக் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது. கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வமுடையவர்கள் இவ்வகுப்புக்களில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது.

(ஒ-20)

## கட்டாக்காலி நாய்களின் அச்சுறுத்தல் அதிகரிப்பு

### கடியுண்ட இருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

கட்டாக்காலி நாய்களின் தொல்லை மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

கட்டாக்காலி நாய்கள் கடித்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற இருவர் கடந்த புதன்கிழமை மரணமடைந்தனர். மேலும் ஒருவர் உயிராபத்தான நிலையில் உள்ளார்.

கடந்த 3ஆம் திகதி கட்டாக்காலி நாய் ஒன்றினால் கடித்து குதறப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த சண்டிலிப்பாயைச் சேர்ந்த சின்னவன் முருகேசு (வயது 65 என்பவர் புதன் இரவு 11 மணிக்கு மரணமானார்.

நல்லூர் கைத்தொழில் நிறுவனமொன்றில் கடமையாற்றும், கோப்பாய் தெற்கைச் சேர்ந்த ரி. சைலா (வயது 25) என்ற இளம் பெண் கடமை முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை கடந்த மாதம் விசர் நாயினால் கடியுண்டிருந்தார்.

அதற்கு தகுந்த சிகிச்சையை மேற்கொள்ளாது விசர்நாய்க்கடியினால் ஏற்படும் நோய்க்கிலக்காகி அவரும் யாழ். ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார்.

கடந்த நான்கு மாதங்களுக்கு முன் விசர்நாயினால் கடியுண்ட ஊரெழுவைச் சேர்ந்த பசுபதி சந்திரன் [வயது 35] என்பவர் தகுந்த சிகிச்சையை மேற்கொள்ளாததால் விசர்நாய்க்கடியினால் ஏற்படும் நோய்க்கிலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இவரின் நிலைமையும் கவலைக்கிடமாகவுள்ளது. இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். [ஒ-15]

## தொழில் நுட்ப கல்லூரி இறுதிப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 10

கடந்த 16ஆம் திகதி நடைபெற இருந்த தொழில்நுட்பக் கல்லூரி—பயிற்சி நெறிகளுக்கான இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு பின் போடப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமது மாணவர் பிரவேச அனுமதிச் சீட்டைச் சமர்ப்பித்து பரீட்சை அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் எனக் கல்லூரி அதிபர் கே. ஜெயராஜா தெரிவித்துள்ளார்.

(ஒ-14)

## கைக் குண்டுகள் கண்டுபிடிப்பு

கொழும்பு புறக்கோட்டையில் பொலீஸார் 2கைக்குண்டுகளை மீட்டுள்ளனர். இப்பகுதியில் உள்ள பெட்டிக்கடையொன்றில் இவை மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ 14)

## தமிழரை துன்புறுத்தாதே; நீதிவான் கூறிய புத்திமதி!

கொழும்பு, ஜூன் 10

நாட்டின் மீது பற்றிருந்தால் இராணுவத்திற் சேர்ந்து போரிடு; அப்பாவித் தமிழர்களை துன்புறுத்தாதே!

நீர்கொழும்பு பிரதம நீதிவானும், மேலதிக மாவட்ட நீதிபதியுமான லலித்ஜயசூரிய சிங்கள வாசி ஒருவரை இவ்வாறு எச்சரிக்கை செய்தார்.

இதுபற்றி தெரிவிக்கப்படுவதாவது:-

வெற்றுப்போத்தல்கள் சேகரிக்கும் தமிழர் ஒருவரிடம் சிதுவையைச் சேர்ந்த டி.சோமரட்ணஎன்பவர்சாராயம் வாங்குவதற்கு பணம் கேட்டுள்ளார். தமிழர் பணம் கொடுக்க மறுத்துவிட, வெ, ஆத்திரமுற்ற சோமரட்ண சில்வா அவரின் வீட்டிற்குள் புகுந்து அங்கு சேகரித்துவைக்கப்பட்டிருந்த 10 ஆயிரம் ரூபா பெறுமதியான போத்தல்களை உடைத்துநொறுக்கி நாசமாக்கி உள்ளார்.

மேற்படி வழக்கில் தீர்ப்பளிக்கும் போதே நீதிவான் இவ்வாறு எச்சரித்தார்.

[ஒ-14]

## கூட்டுறவுக் கடைகளிலும் கலப்பட நல்லெண்ணெய்

யாழ்ப்பாணம், ஜூன் 10

கலப்படம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்த நல்லெண்ணெய் பலஇடங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆளவெட்டி மல்லாகம் ப. நோ கூ. சங்கத்தின் சில கிளைகளிலும் சங்கானைப் பகுதியிலுள்ள சில கடைகளிலும் கலப்படம் செய்து விற்கப்பட்டு வந்த நல்லெண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

யாழ் பிராந்திய சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த உணவு மருந்து பரிசோதகர் திரு. த. மகாதேவன், மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் திரு எஸ். இராஜேந்திரா, சுழிபுரம் பகுதி சுகாதார பரிசோதகர் ஆகியோர் அடங்கிய சுகாதாரக் குழுவினர் கடந்த சில தினங்களாக மேற்கொண்டுவந்த திடீர் பரிசோதனையின் போது கலப்பட நல்லெண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட நல்லெண்ணை போத்தல்களின் லேபல்களில்'' ஸ்ஷென் ஒன்ஞ் ஒயில்''என ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த போதிலும் அந்த நல்லெண்ணெய் போத்தல்களின் 1போத்தலுக்கு கால் போத்தல் என்ற வீதத்தில் தேங்காய் எண்ணெய் கலக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரிய வருகின்றது.

இது தொடர்பாக நல்லெண்ணெய் தயாரிப்பாளர்கள் மூவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ஒ-4)

## தேனீ வளர்ப்பு கருத்தரங்கு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விவசாய சூழல் பாதுகாப்புப் பகுதியினரால் தேனீ வளர்ப்பு தொடர்பான கருத்தரங்குகள் வட்ட ரீதியாக நடத்தப் படவுள்ளன இக்கருத்தரங்கில் தேனீவளர்ப்புத் தொடர்பான அறிமுகம், அதன்வளம், தொழில் நுட்பம், செய்கை முறைகள், அறிவுரைகள், ஆலோசனைகள் தொடர்பாக கருத்துரைகள் வழங்கப் படவுள்ளன.

சங்கானை வட்டத்தில் இன்று சனி பிற்பகல் 3 30 மணிக்கு வட்டு இந்துக்கல்லூரியிலும், பளை வட்டத்தில் 12 ஆம் திகதி முற்பகல்10 00 மணிக்கு பளை வட்டச் செயலகத்திலும், மருதங்கேணி வட்டத்தில் 12 ஆம் திகதி பிற்பகல் 2 00 மணிக்கு அம்பன் பாடசாலையிலும், சண்டிலிப்பாய் வட்டத்தில் 14 ஆம் திகதி பிற்பகல் 3 . 00 மணிக்கு சண்டிலிப்பாய் மகா வித்தியாலயத்திலும், கோப்பாய் வட்டத்தில் 15 ஆம் திகதி பிற்பகல் 3 00 மணிக்கு நீர்வேலி சி சி பாடசாலையிலும் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

இக் கருத்துரை வழங்கலில் தேனீ வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்களையும் கிராமிய உற்பத்திக்குழு விவசாயப் பகுதி உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொண்டு பயனடையுமாறு தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவன விவசாயம், சூழல் பாதுகாப்புப் பகுதியினர் கேட்டுள்ளனர். (க)

## இசைத்துறை வல்லுநருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

இராமநாதன் இசைக் கல்லூரியில் இறுதி ஆண்டுப் பரீட்சையில் சித்தியடைந்த இதுவரை தொழில் பெற்றுக் கொள்ளாதவர்களை நாளை மறுதினம் காலை 9 00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் தம்மை வந்து சந்திக்கும்படி வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் திரு சுந்தரம் டிவகலாலா கேட்டுள்ளார். (உ)

## நரோமா பயணிகளுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 10

ஜூன் மாதம் 3 ஆவது முறை 'நரோமா' கப்பலில் பயணம் செய்வதற்கு பதிவு செய்தவர்கள் இன்று காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் தங்கள் ஆசனங்களுக்கான பணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (உ)

# நிலத்துக்குக் கீழ் புலிகளின் வெடிமருந்துக் களஞ்சியம்!

## தகவல் கிடைத்துள்ளதாம்

கொழும்பு, ஜூன் 10

கொழும்புக்கும் நீர்கொழும்புக்கும் இடையில் உள்ள ஓர் இடத்தில் பயங்கர வெடிமருந்துகள் ஆயுதங்கள் ஆகியனவற்றை நிலத்துக்குக் கீழ் அமைக்கப்பட்டுள்ள களஞ்சியம் ஒன்றில் புலிகள் வைத்துள்ளனர் என்ற தகவல் பாதுகாப்பு வட்டாரங்களுக்குக் கிடைத்துள்ளதாக ''திவயின'' சிங்கள வார இதழ் தெரிவித்துள்ளது

நிலத்திற்கு அடியில் சீமெந்தினால் கட்டப்பட்டுள்ளதாக நம்பப்படும் இக் களஞ்சியத்தைக் கண்டறிய பொலீஸார் தேடுதல் நடவடிக்கைகளை விரிவாக்கியுள்ளனராம்.

பல மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து உப்பை ஏற்றிவந்த லொறிகளில் மிகவும் கவனமாக வத்தளைப் பகுதிக்கு வெடிப்பொருள்கள் கொண்டுவரப்பட்டுள்ளன என பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில் சில மாதங்களுக்கு முன்னர் வெடிப்பொருள்கள் நிரப்பப்பட்டு கொழும்புப் பகுதியில் நடமாடிய வான் தற்போது காணாமற் போயுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக இரகசியப் பொலீஸார் தெரிவிக்கின்றனராம்.

[ஒ-10]

# அட்டனில் சோதனை; தமிழரின் வீடுகள் மட்டும்!

கொழும்பு, ஜூன் 10

பல இன மக்களும் வசிக்கும் அட்டன் பகுதியில், ஏனைய வீடுகளை ஒதுக்கிவிட்டு, தமிழர்களின் வீடுகள் மட்டும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த திங்கட்கிழமை இப்பகுதியில், தமிழர்களின் வீடுகள் மாத்திரம் சோதனையிடப்பட்டன.

இப் பகுதி தமிழர்களின் வீடுகளுக்கு சென்ற பொலீஸார், குடியிருப்பாளர் விபரங்களை கேட்டு, தேசிய அடையாள அட்டைகளையும் சோதித்தனர்.

அங்குள்ள தமிழர்கள் அனைவரும் பொலீஸ் நிலையத்தில், தமது பெயர்களை பதிவு செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

இந்தச் செயல் அங்குள்ள தமிழர்கள் மீது ஏனைய இனத்தவர் தப்பான அபிப்பிராயங்களை ஏற்படுத்த வழிவகுக்கும் என சுட்டிக் காட்டப்படுகிறது.

இது வீண் சந்தேகத்தையும் தோற்றுவிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## செல்லாட்சிப்பிள்ளை வைத்திலிங்கம்

''லிங்கவாசா'' நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அரசடிவீதி சந்தர்மடத்தை வதிவிடமாகக் கொண்டவருமாகிய திருமதி செல்லாச்சிப்பிள்ளை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சிங்கப்பூர் வைத்திலிங்கத்தின் (உரும்பிராய்) மனைவியாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று சனிக்கிழமை [10-6-95] மாலை 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
வை. துரைராசா
[மகன் - ஆங்கில ஆசிரியர், கொக்குவில்]
பே. பரராசசிங்கம்
[மருமகன்]

126, அரசடி வீதி,
இந்துமகளிர் கல்லூரி முன்பாக,
யாழ்ப்பாணம். (37024)

## திருமதி
## செல்லமுத்து கணபதிப்பிள்ளை

மாதகல் யாதம்பையைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமான திருமதி கணபதிப்பிள்ளை செல்லமுத்து கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் கந்தசாமி (கனடா), சுப்பிரமணியம் (கனடா], பரமேஸ்வரி (இந்தியா), Dr சண்முகசுந்தரம் (கலிபோர்ணியா), இலட்சுமி (சந்திலைமடு), சாந்திமதி (கனடா), விமலாதேவி ஆகியோரின் அன்புத்தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
ஆ. பொன்னம்பலம்
(மருமகன்]

11, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம் (37026)

## பர்னாந்து அந்தோனிப்பிள்ளை

(அன்னத்துரை மாஸ்ரர் - யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய ஓய்வுபெற்ற ஆசிரியர்)

பாஷையூர் புனித அந்தோனியார் வீதியைச் சேர்ந்த பர்னாந்து அந்தோனிப்பிள்ளை நேற்று (9-6-95) இறைவனடி சேர்ந்தார்.

இவர் திரேசம்மா அந்தோனிப்பிள்ளையின் அன்புக் கணவரும், கனிசியஸ் (பொறியியலாளர் - (லண்டன்), சாந்தி [பிரான்ஸ்], வசந்தி (பிரான்ஸ்), ஜெயந்தி (ஜெர்மனி), டனிசியஸ் (பிரான்ஸ்), றெனிசியஸ் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், இந்திரா (லண்டன்), வெலான்சியஸ் (பிரான்ஸ்), பேக்மன்ஸ் (பிரான்ஸ்), உதயகுமாரன் [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமனாரும், பேபியன், யூலியன், ஜெரமியன், ஸ்ரீபா அன்றியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10-6-95) சனிக்கிழமை பி. ப. 3 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
அ. றெனிசியஸ்
(மகன்)

இல. 1, புனித அந்தோனியார் வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம். (37027)

## திருமதி மகேஸ்வரி துரைசிங்கம்

திருமதி மகேஸ்வரி துரைசிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் துரைசிங்கத்தின் அன்பு மனைவியும், சகுந்தலாதேவி, புனிதவதி, சோமசுந்தரம் [சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழ். மாநகராட்சி மன்றம்] தனபாலசிங்கம் [சிறீலங்கா ரெலிகொம் யாழ்], யோகேஸ்வரி [கொழும்பு], பாக்கியலட்சுமி [ஜேர்மனி] ஆகியோரின் அருமைத் தாயாரும், நவரத்தினம், பஞ்சலிங்கம், காயத்திரி, இராணியம்மா, வசந்தகுமார் [சுங்க இலாகா கொழும்பு], கிருஸ்ணகுமார் [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமியாரும், மனோன்மணி, சுந்தரலிங்கம் [தாசன் அச்சகம்], காலஞ்சென்ற பரமேஸ்வரி, மற்றும் கனகமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அழகரெத்தினம் [மலேசியா], காலஞ்சென்ற நடேசு, மற்றும் பரமசாமி, அன்னலெட்சுமி, ஐயாத்துரை, மகேஸ்வரி, அமிர்தலிங்கம், காலஞ்சென்ற தெய்வேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.6 95) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
T. சோமசுந்தரம்
[மகன்]

36/3, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி. [37019]

## திருமதி தங்கம்மா கனகசபை

அளவெட்டி பள்ளியவத்தையைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா கனகசபை நேற்று (09-06-95) வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் கனகசபையின் (ஓய்வு பெற்ற சிறாப்பர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, சித்தாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவபவானி (பிரான்ஸ்), ஸ்கந்தகுமார் (ஸ்கந்தன்), ஸ்ரீதரன், ரவீந்திரகுமார் (பிரான்ஸ்), சசிகலா ஆகியோரின் அன்புப் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [10-6-95] சனிக்கிழமை ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. செல்லையா
(ஓய்வுபெற்ற ஆசிரியர்]
[மைத்துனர்]

G. P. S. வீதி,
கல்வியங்காடு. (37025]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 10-06-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# கட்டுநாயக்காவிலும் அவசரகாலச் சட்டம்

கொழும்பு, ஜூன் 10

நாட்டில் நடைமுறையில் உள்ள அவசரகாலச் சட்டம், கொழும்பு சர்வதேச விமான நிலையத்தைச் சூழவுள்ள பகுதிகள் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அவசரகாலச் சட்டம் ஏற்கெனவே வடக்கு — கிழக்கு மற்றும், தலைநகர் கொழும்பு ஆகிய இடங்களில் நடைமுறையில் உள்ளது தெரிந்ததே.

கட்டுநாயக்கா விமான நிலையப் பகுதியில் தரித்து நின்ற வாகனம் ஒன்றில் அண்மையில் குண்டு ஒன்று வெடித்ததை அடுத்து அவசர காலச் சட்டம் அந்தப் பிரதேசம் வரை விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. (உ-5)

# அநுராதபுரத்தில் இன்று பிக்குகள் சத்தியாக்கிரகம்

அநுராதபுரம், ஜூன் 10

பயங்கரவாத நடவடிக்கைகள் ஒழிக்கப்பட வேண்டும் எனக் கோரி பௌத்த பிக்குகள் இன்று சனிக்கிழமை அநுராதபுரம் ரூபான்வெலிசாயாவில் சத்தியாக்கிரகம் ஒன்றை நடத்துகின்றனர்.

அரசாங்க அமைச்சர்களும் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்களும் இந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்கின்றனர். [உ-14]

### அமைச்சு உத்தரவை அடுத்து

# தோட்டப் பகுதிகளில் பாதுகாப்புத் தீவிரம்!

கொழும்பு, ஜூன். 10

நாட்டின் பெருந்தோட்டப் பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்தும்படி பாதுகாப்பு அமைச்சு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

அண்மையில் எல்பிட்டிய தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகள் தீவைத்து கொளுத்தப்பட்டதை அடுத்து பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அநுருத்த ரத்வத்தையின் கவனத்துக்கு இது தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டது.

இதனையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை —

மேற்படி எல்பிட்டி தீவைப்புச் சம்பவம் தொடர்பாக ஒரு இராணுவச் சிப்பாய் உட்பட 14 பேரை எல்பிட்டிய பொலிஸார் கைதுசெய்து உள்ளனர்

எல்பிட்டிய நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட இந் நபர்களை இம்மாதம் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (உ-14)

### வடக்கு----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகளுக்குச் செல்ல முடியாதிருக்கிறது. வீடுகளில் இருந்து அவர்களுக்கு கடிதங்களும் இப்போது கிடைப்பதில்லை, பெற்றோர் இறந்தால் கூட அவர்களால் அறிய முடியாதிருக்கிறது. சகோதரிகளுக்கு நல்வாழ்வு கிடைத்தால் கூட இதே நிலைமைதான். தங்களது குடும்பத்தினருடன் தொடர்பு கொள்வதற்கு அவர்களுக்குவழியேயில்லை''.

— என்று யாழ்குடா நாட்டில் உள்ள இராணுவத்தளம் ஒன்றில் உள்ள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

யாழ். குடா நாட்டுக்குள்ளும் அதை அண்மித்த பகுதிகளிலும் இருக்கும் இராணுவ முகாம்களில் சுமார் 40 ஆயிரம் படைவீரர்கள் இருக்கிறார்கள்.

பலாலி அருகே படையினரின் இரு ''அவ்ரோ'' விமானங்கள் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதை அடுத்து இவர்களுக்கான விநியோகங்கள் தடைப்பட்டுள்ளன என்பது தெரிந்ததே

விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதை அடுத்து —

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பூநகரி போன்ற தனியான இடங்களில் இருக்கும் இராணுவ முகாம்களை புலிகள் தாக்கக் கூடும் என அரச தரப்பில் அஞ்சப்படுகிறது.

''அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படுவதற்கு முன்பு பூநகரியில் இறங்குவதற்கு எம்மிடம் ஆக 5 ஹெலிகொப்டர்களே இருந்தன. விமானிகள் தங்களை கைவிட்டு விட்டதால் படையினர் கடுமையான ஆத்திரமடைந்திருக்கிறார்கள் — என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்தார். (உ-14]

### பாணந்துறை ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட இரண்டு சடலங்களையும் பொலீஸார் கைப்பற்றினார்கள். ஏரியில் ஹிரான்னற்றுற் பொல என்ற இடத்திலேயே இந்தச் சடலங்கள் காணப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இரண்டு நாள்களின் பின்னர் மேலும் இரண்டு சடலங்கள் ஏரியில் மிதந்து வரக் காணப்பட்டன. இந்திகதொட்டுப்பல என்ற இடத்திலேயே இவை கண்டுபிடிக்கப்பட்டன.

பழுதடைந்த சடலங்கள்

இந்த நான்கு சடலங்களும் நீளக் காற்சட்டையுடனும், ஷேட்டுடனும் காணப்பட்டன சடலத்திற்குரியவர்கள். 35 முதல் 40 வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருக்கலாம் என மதிப்பிடப் பட்டுள்ளது.

இந்தச் சடலங்கள் அனைத்தும் கொழும்பு [illegible] சாலைக்கு [illegible] ளன [illegible]

### 'சீ—டான்ஸர்'..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டன் செல்லும் கப்பல்களுக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடாது என்ற பரஸ்பர இணக்கத்தைப் புலிகள் தொடர்ந்து தீவிர கவனத்துடன் கடைப்பிடிப்பர் என்று மீண்டும் உறுதிபடத் தெரிவித்திருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன, (உ-4-6)

### வடபகுதிக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்குச் சென்று வரும் போது —

அங்கு வைத்து பாவித்த பழைய ரயர், பற்றறி மற்றும் வாகன உதிரிப்பாகங்களைப் பொருத்திக் கொண்டு வந்து —

கொழும்பில் வைத்து பழையவற்றை மாற்றிப் புதிய உதிரிப்பாகங்களைப் பொருத்திக் கொண்டு வவுனியா வருவதாகவும் —

இதனைத் தடுப்பதற்கான சில கட்டுப்பாட்டு நடைமுறைகளை அமுலுக்குக் கொண்டு வர இராணுவம் உத்தேசித்துள்ளதாகவும் —

அந்த நடைமுறை இன்னும் சில தினங்களில் வகுக்கப்பட்டதும் — தனியார் லொறிகளை வடக்கேவர அனுமதிக்க இராணுவ அதிகாரிகள் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும்—

அரச உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். [அ-9]

உயரப் பறக்கும் பருந்துக்கு
கோழிக் குஞ்சே
குறியாகும்!
தெருவில் சுற்றும் உளவாளிக்கு
தேடும் உளவே
குறியாகும்!

# வடக்கு இராணுவ நடவடிக்கைக்கு அநுராதபுர தளத்தில் ஆயத்தம்!

வடபகுதியில் அரசு மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள பாரிய இராணுவநடவடிக்கைக்காக அநுராதபுரம் படைத்தளத்தில் படையினர் ஆயத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இராணுவத்தின் வடக்கு கிழக்கு திட்டமிடல் தளபதி மேஜர் ஜெனரல் ரோஹான் தலுவத்தை உட்பட முக்கிய படைத் தளபதிகள் அநுராதபுரம் படைத்தளத்தில் இட்டமிடலில் ஈடுபட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பல்லாயிரக்கணக்கான படையினர் பங்கு கொள்ள வுள்ள வடபகுதி போர்முனைக்கு நடவடிக்கைகளுக்கு அநுராதபுரம் ஒரு பிரதான பின்தளமாக பயன்படுத்தப்படுவதற்கு உரிய முன் ஆயத்தங்களே அங்கு நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# காலியில் வன்செயல் வெடிக்கும் என முன்பே எச்சரிக்கை விடுக்கப்பட்டது

### ஆனால் அதிகாரிகள் உதாசீனம் செய்தனராம்

கொழும்பு, ஜூன். 10

'தமிழ் மக்களுக்கு எதிரான வன்செயல் ஒன்றுக்கு திட்டமிடப்படுவதாக எமக்கு தகவல் கிடைத்தது. இது பற்றி அரசியல் வாதிகளிடமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் அறிவித்திருந்தும் கூட எமது உடைமைகளை பாதுகாக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட இல்லை.

— இவ்வாறு காலி மாவட்டத்துக்கு சென்றிருந்த மனித உரிமைகள் குழு மற்றும் பத்திரிகையாளர் குழு ஆகியவற்றிடம் காலிப் பகுதி தமிழ் மக்கள் தெரிவித்துள்ளனர்.

"காலி நகரம் வழமைக்கு திரும்பியுள்ள போதிலும் நாம் பீதியுடனேயே வாழ்ந்து வருகின்றோம்"

'நாம் வாடகைக்கு குடியிருந்த வீடுகளில் மீண்டும் எம்மை அனுமதிக்க வேண்டாம் என்ற பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. — என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை பாதிப்புக்கு உள்ளாகிய வீடுகள் மற்றும் கடைகள் என்பவற்றின் எண்ணிக்கையும் வெளியிடப்பட்டதை விட அதிகமாக உள்ளதாக காலி நகரைப் பார்வையிட்ட மனித உரிமைக் குழுவினர் தெரிவித்துள்ளனர். [உ-14]

### இனப்பிரச்சினை....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக எமது நன்மதிப்பு வெளிநாடுகளில் உயர்ந்துள்ளது. இதனைப் பொறுக்க முடியாமலே விடுதலைப் புலிகள் போரில் குதித்துள்ளனர்.

இனக்கலவரம்

கடந்த காலங்களில் சில பொலிஸ் அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மையினால் பொலிஸ் திணைக்களமே பெரும் அபகீர்த்திக்கும் அகௌரவத்துக்கும் இலக்காயிற்று.

நாட்டின் தற்போதைய நிலைமைகளை பயன்படுத்தி கலவரங்களை உண்டு பண்ணுவதற்கு திட்டமிட்ட ரீதியில் சில இயக்கங்கள் இயங்கத் தொடங்கியுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனை தீவிர பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதுடன் அவற்றை முளையிலே கிள்ளி எறிவதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுமாறு உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

இலங்கை பொலிஸ் பிரிவு புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் சில சீரான நடவடிக்கைகள் மூலம் அது ஒரு ஒழுங்கமைப்பிற்குள் கொண்டு வரப்படும் — என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (அ-14)

### தொண்டா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்றும் —

கோரும் பிரேரணையை கொழும்பு மாவட்ட எம்.பி. சுசில் முனசிங்க கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் முன் வைத்தார்.

இதற்கு பதிலளித்த கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க —

பொதுத் தேர்தலின் போது ஐ. தே. கவும், தொண்டமான் தலைவராக உள்ள இ. தொ. காவும் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டிருந்தன. ஆதலால் அமைச்சர் தொண்டமானின் நடவடிக்கை குறித்து பொறுத்திருந்து பார்ப்போம் — என்று

குறிப்பிட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. [உ-14]

# தந்திரிமலைப் பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடு

தந்திரிமலை பகுதிக்கு மிகக் கடும் பாதுகாப்பு அளிக்கப் பட்டுள்ளது.

அங்கு விடுதலைப் புலிகள் மேற்கொள்ளக் கூடிய எந்த வித தாக்குதலையும் முறியடிக்கக் கூடியவாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் —

தேவையான பொலிஸ், மற்றும் இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-5)

# இந்திய அமைச்சரவை இன்று விரிவுபடுத்தப்படும்

புதுடில்லி, ஜூன் 10

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தமது அமைச்சரவையை விரிவுபடுத்தவிருக்கிறார்.

புதிய அமைச்சர்கள் இன்று மாலை ஐந்து மணிக்கு பதவியேற்பார்கள்.

ஐம்பத்தியேழு பேரைக் கொண்ட நரசிம்மராவின் தற்போதைய அமைச்சரவைக் குழுவில் நரசிம்மராவ் உட்பட 18 பேர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாவர். பதினொரு பேர் சுயாதீன பொறுப்புள்ள இணையமைச்சர்களாவர். ஏனையோரில் இருபத்தியைந்து பேர் இணை அமைச்சர்கள். மூவர் துணை அமைச்சர்களாவர். [உ]

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் நடராஜா

ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் நடராஜா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நீர்கொழும்பு ஓவசியர் வ. நடராஜாவின் அன்பு மனைவியும், டாக்டர் சிவராஜா [யாழ். மருத்துவ பீடம்], சிவனேஸ்வரி [பெரிய பேபி], மகேஸ்வரி [சின்ன பேபி], விக்னராஜா [இங்கிலாந்து], ஸ்ரீஸ்கந்தராஜா (நோர்வே), செல்வராஜா [இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும், மலையரசி (யாழ். மருத்துவபீடம்), ஸ்ரீவிக்னேஸ்வரன் [யாழ். தொழில்நுட்பக் கல்லூரி), நித்தியானந்தன் (பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), சிவாஜினி [இங்கிலாந்து]. சத்தியாதேவி [நோர்வே], விஜயலட்சுமி [இங்கிலாந்து] ஆகியோரின் அன்பு மாமியாரும், மீனா செந்திலநந்தனன் [யாழ். பல்கலைக்கழகம்], கல்பனா சந்திரசேகர் [யாழ்.. மருத்துவபீடம்], நகுலேஸ்வரன், கேதீஸ்வரன் - ஜனகன், பார்த்திபன், பிரசன்னா, கீர்த்தனா, சோபனா, ரக்ஷனா, சௌமியா, கௌதமன், மௌவியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திலக்ஷனாவின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற இராசமணி, தம்பிராஜா, மற்றும் குமாரசிங்கம், யோகாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் அவரது இல்லத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை (11-06-95) காலை நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைக்கோட்டை இந்து மயானத்திற்கு காலை 8-00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்
டாக்டர் ந சிவராஜா
[மகன்]

''ஈஸ்வர இல்லம்''
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை. [37017]


# முகவரி மாற்றம்

V.S.B. GROUP

எமது நிறுவனம் பின்வரும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

வி.எஸ்.பி. குறூப்
275, 277, அர்ச்சுனா சாலை,
(ஸ்ரான்லி வீதி)
(முன்பு இயங்கிய இடத்துக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

(சி-1468)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org